AUG. 61
74
கண்ணன்
குழந்தைகளின் பத்திரிகை

ஒரு கடிதம்

லெப். கர்னல் ஸி. ஆர். கிருஷ்ணஸ்வாமி

219, பூந்தமல்லி ஹை ரோடு, சென்னை - 7

அன்புள்ள ஐயா,

என் பேத்தி உங்கள் கண்ணன் கழகத்தில் ஓர் அங்கத்தினர். நல்ல முறையில் கண்ணுக்கும் கருத்துக்கும் அழகாய் இருக்கும் உங்கள் கண்ணன் பத்திரிகையை அவளிடமிருந்து வாங்கி நான் பார்ப்பதுண்டு. சிறு வயதில் எனக்குத் தமிழ் என்றால் கசப்பாகவே இருக்கும். காரணம் அதைரியப்படுத்தும் தமிழ்ப் பண்டிதர்களின் போக்கும் நன்னூல் போன்ற இலக்கண நூல்களின் எளிமையின்மையுந்தான்.

ஆனால் இப்பொழுது என் மன நிலை வேறு. தமிழ்ப் புத்தகங்களில் ஒரு ருசி ஏற்பட்டுவிட்டது. சிரத்தையுடன் படிக்கிறேன்.

இப்பொழுது நீங்கள் இந்தக் கண்ணன் கழகத்தின் மூலம் சிறுவர்களுக்குச் செய்துவரும் சிறந்த தொண்டுக்காக என் மனமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளவே இதை எழுதுகிறேன். எல்லாக் குழந்தைகளையும் ஓரிடத்தில் ஒன்று சேர்த்து, அ[illegible] கள் குதூகலிக்கும்படியான விளையாட்டுக்கள் நடத்[illegible] தின்பண்டம் வழங்கியதையும் பாராட்டுகிறே[illegible] இதற்குப் பெரும் நேரமும் பொருளும் செலவா[illegible]யிருக்க வேண்டும் என்றே கருதுகிறேன்.

மிகைப்படுத்திப் பேசுவதாகக் கொள்ளாமல் என்னுடைய இந்தச் சிறிய காணிக்கை (ரூ. 20/-)யை நேற்றைக் கூட்டத்துக்கான செலவில் ஒரு பகுதிக்காக ஏற்றுக்கொள்வீர்களா?

நீங்கள் மேன்மை பெறவேண்டும் என்று விரும்பும்

தங்கள் உண்மையுள்ள,

(ஒப்பம்) ஸி. ஆர். கிருஷ்ணஸ்வாமி.

திருவிழா

அழ. வள்ளியப்பா

திருவி ழாவாம் திருவிழா!
தேரி ழுக்கும் திருவிழா!
ஒருமு கமாய் மக்களெலாம்
ஒத்துக் கூடும் திருவிழா.

பட்டா டைகள் உடுத்தலாம்;
பாட்டி கையைப் பிடிக்கலாம்;
கொட்டு மேளம் கேட்டதும்
குடுகு டென்று ஓடலாம்.

ஆனை குதிரை பாக்கலாம்;
அதிர் வேட்டுக் கேட்கலாம்;
சேனை போல யாவரும்
திரண்டு கூடிச் செல்லலாம்.

தேரில் சாமி வருவதை
தெருவில் நின்று பார்க்கலாம்.
ஊரா ரோடு தேங்காயை
உடைத்து வைத்து வணங்கலாம்.

பால் கோவா வாங்கலாம்;
பஞ்சு மிட்டாய் வாங்கலாம்;
நாலே கால் பணத்திலே
நடக்கும் பொம்மை வாங்கலாம்.

பாட்டி நானும் கேட்பதைப்
பட்ச மாக வாங்குவாள்
பாட்டி யவளைக் கையுடன்
கூட்டிக் கொண்டே திரும்புவேன்.



பாராட்டுப் பரிசுக் கதை:

அன்புப் பரிசு

டி. எஸ். ராதாபாய்

(R. 297)

"அடே மணி, சமூக நூலில் என்ன என்ன கேள்விடா முக்கியமாக வரும்? பார்லிமெணட் பாடம் ஒன்றுதாண்டா எனக்குக் கஷ்டமாய் இருக்கிறது" என்று தங்கம் மணியிடம் சொன்னாள்.

"படித்தால் தானே வறது. தமிழ் வாத்தியார் நம் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டார். ஆனால் நாம் தமிழில் 'கோட்'டடிக்கப்போறோமா என்ன? தமிழ் வாத்தியாரின் முகத்தை நினைத்துக் கொண்டால் இப்பொழுதுகூடச் சிரிப்பு வறது" எனக் கூறிக் கடகடவெனச் சிரித்தான் மணி.

தங்கம் சில சமயம் படபட வென்று பேசிவிட்டாலும் வாத்தியாரைக் கேலி செய்பவர்களை வெறுப்பவள். மணியின் வகுப்பில் படிப்பதாலும் அவன் வீட்டிற்கு எதிர வீட்டில் இருப்பதாலும் அவனுடன் சிநேகமாயிருந்தாள். ஆகவே அவள் "போ - உன் காரியமே எனக்குப் பிடிக்கவில்லை. அவருக்கு வரும் வருவாயில் அவர் என்ன செய்வார்? அரை வயிற்றுக்குச் சாப்பிட்டுவிட்டுத் துஷ்டப் பையன்களான உங்களுடன் அவரால் எப்படி மாரடிக்க முடியம்?" என்றாள்.

"போடி, எனக்கு அப்பவே தெரியும். நீ பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்" என்று மணி கூறினதும் தங்கத்திற்குக் கோபம் வந்தது.

"உனக்கு நல்லது சொன்னால் செவிடன் காதில் சங்கு ஊதினாற் போல்தான். உன் சுபாவம் தெரிந்து உன்னுடன் பேச வந்தேனே" என்று கோபத்துடன் விடு விடு என்று வெளியே சென்றுவிட்டாள். முன்னொருநாள் கோபித்துச் சென்றவள் இன்றுதான் மறுபடியும் பேச வந்திருந்தாள். 'அடாடா! மூக்கின் நுனியில் கோபத்தைப் பார்!' என்று நினைத்துக்கொண்டே கதைப் புத்தகம் ஒன்றைப் புரட்டலானான் மணி.

"மணி, மணி!" என்று கூப்பிட்டார் அவன் தகப்பனார்.

அவன் தகப்பனார் சுமாரான வருப்படி உள்ள ஒரு வக்கீல். தாராளமான மனதுடையவர். மணி செல்வப்பிள்ளை. அவர் கொஞ்சம் முன்கோபி. "பேனாவைக் காணவில்லையே! இது என்ன வீடா, சத்திரமா?" என்று இரைவார். அவர் மனைவி பார்வதி, "வீணாக ஏன் இப்படிக் கத்துகிறீர்கள்?" என்று பேஜையின்மீதுள்ள புத்தகக் குவியலின் அடியிலிருக்கும் பேனாவை எடுத்துக் கொடுப்பாள்.

"மணி, மணி!" என்று மறுபடியும் கர்ஜிக்கலானார் வக்கீல். அவர் மனைவியும் என்ன நடக்குமோ என்று உள்ளே எட்டிப் பார்த்தாள். மணி நடுங்கிக்கொண்டே அவர் முன்வந்து நின்றான். "நீ பள்ளிக்கூடம் எதற்கடா போகிறாய்? படிக்கவா அல்லது கொம்மாளம் அடிக்கவா?"

இதற்குப் பதில் இல்லை.

"என்னதான் செய்தான், சொல்லுங்களேன்" என்றாள் பார்வதி.

"உன் பிள்ளை லட்சணத்தைக் கேள்! நேற்று என் நண்பர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவர் பெண் ஜயந்தியும் இவன் வகுப்புத்தானாம். இவனுடைய அட்டகாசங்களைப்பற்றி அவளிடம் கேட்டுப் பார்!" என்று அவர் மணியின் அருகில் வந்தார்.

மணிக்குக் கைகால் நடுக்கம் எடுத்தது. "ஏண்டா நடுக்கறே? உதைப்பேன் என்று கூறிய தமிழ் வாத்தியாருக்கு 'அழுமூஞ்சி' என்று பேர் வைத்திருக்கிறாயாமே. குரு பக்தியைப் பார்! வாத்தியார் சாபம் என்னவாகும் என்று உடம்பில் பயமிருக்கிறதா? கஷ்டப்பட்டு உங்களைப்போன்ற தூங்குமூஞ்சிகளின் மண்டையில் அவர் பாடங்களை ஏற்றினால் நீங்கள் செய்யும் பிரதி உபகாரம் வசவும் திட்டுமா?" என்று கத்தினார்.

மணி வாய்திறந்து ஏதோ சொல்ல நினைத்தான். ஆனால் பார்வதி அம்மாள், "உங்களுக்கு எல்லாத்துக்கும் சந்தேகம்தான். யாரோ ஏதோ சொன்னால் நம்பிவிடுகிறதா?" என்று பயந்துகொண்டே சொன்னாள்.

"உன் பிள்ளைக்கு உன்னைத் தவிர வேறு யார்தான் பரிந்துகொண்டு வருவார்? சே, கண் முன்னே நில்லாதே, எங்கேயாவது தொலை!" என்று கூறிவிட்டு, சாவகாசமாக ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினார்.

மணிக்கு அழுகையாக வந்தது. அப்பா கோபித்துக்கொண்டாரே என்றல்ல. தன்னை அவ்வளவு கேவலமாக எண்ணிவிட்டாரே என்றுதான். அன்று வகுப்பில் நடந்

தது அவன் மனக்கண் முன்னால் வந்து நின்றது.

மூன்றாம் படிவ மாணவர்கள் எமகாதகர்கள் என்று கேள்விப் பட்டிருந்தார் தமிழ் வாத்தியார். மிரட்டலினால் பையன்களை அடக்கலாம் என்ற கொள்கை உடையவர் அவர்.

ஒரு பையன் முதல் நாள் தமிழ் வாத்தியார் வகுப்பில் நுழைந்ததும் வேண்டும் என்றே, "திரிகடுகம் என்றால் என்ன சார், பொருள்?" என்றான்.

மணி, "பல்லை உடைக்கும் சொல்" என்றான்.

உடனே வாத்தியார், "யாருடா அந்த அதிகப்பிரசங்கி? நினைத்ததைப் பேச இது உங்கள் வீடு என்று நினைத்தாயோ? ஏறுடா பெஞ்சிமேல்" என்று அதட்டினார்.

"பெஞ்சிமேல் ஏறும் வழக்கம் இங்கு இல்லை, சார்!" என்று மணி கத்தினான்.

"என்னடா நான் சொல்லும் போது எதிர்த்துப் பேசுகிறாய்?" என்று தமிழ் வாத்தியார் சொன்னவுடன் இரண்டு பையன்கள் எழுந்து, "நாங்கள் பெஞ்சிமேல் ஏறும் வழக்கம் இல்லை. வேண்டுமானால் வெளியே சென்றுவிடுவோம்" என்றனர்.

"அப்படி ஆனால் வெளியேதொலையுங்கள்" என்றார் வாத்தியார்.

வகுப்பில் எல்லோரும் ஆர்ப்பாட்டம் செய்தனர். பக்கத்து அறையிலிருக்கும் தலைமை உபாத்தியாயர் இந்தக் கூச்சலைக் கேட்டு மூன்றாம் படிவம் 'ஏ' பிரிவில் நுழைந்து, வகுப்பை அடக்க முடியாததற்கு வாத்தியாரைக் கோபித்துக்கொண்டார். அவர் சென்றதும் மணி, "பாவம் அழறாரடா வாத்தியார், அழுமூஞ்சி. முதல்நாளே நம்மோடு எண்டா போர் தொடுக்கிறார்? வேண்டும் நல்லா!" என்று கொம்மாளம் அடித்தான். பல தடவை கேலி செய்து பாடம் நடக்க விடாமல் செய்தான். அவர் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டான்.

இன்று இதை எல்லாம் நினைத்துப் பார்த்ததும், 'என்ன இருந்தாலும் வாத்தியார் நம் நலத்திற்குத்தானே சொல்லுகிறார்! கோபித்தால் என்ன?' என்று தோன்றியது அவனுக்கு. 'பாவம், அவருக்குக் கடைசிநாளான இன்று எதர்வது மரியாதை செய்யவேண்டும்' என்றும் தீர்மானித்துக்கொண்டான்.

பள்ளியில் கடைசி மணி 'டணார் டணார்' என்று ஒலித்தது. பியூன் அருணாசலம், 'அப்பாடா!' என்று உட்கார்ந்தான். இன்னும் இரண்டு மாதங்களுக்கு இந்த உத்தியோகம் கிடையாது. 'ஹாய், ஹாய்' என்ற பையன்களின் ஆர்ப்பாட்டங்களைக் கேட்டுக் கேட்டு வழக்கமான அவனுக்கு அந்த இரண்டு மாதமும் பைத்தியம் பிடித்தாற்போல் இருக்கும். அவசர அவசரமாக உள்ளே நுழைந்த மணி, "என்ன அருணாசலம், மணி அடித்தாய்விட்டதா?" என்றான். "மணி வரலையே என்று நான் பெல் அடிக்காமல் இருந்துவிட்டால், நான் வீட்டைப்பார்த்துத் தான் நடையைக் கட்டணும்" என்று கிண்டலாகக் கூறினான் அருணாசலம்.

மணி வகுப்பு அறைக்கு அவசர அவசரமாகச் சென்றான். தமிழ் வாத்தியார் பரீட்சைக்கு வரக்கூடிய சில முக்கிய வினாக்களைச் சொல்லிக்கொண்டிருந்தார். மணியைப் பார்த்து, "வெளியே நில்" என்று சொல்வதற்குப் பதிலாக,

"என் நிற்கிருய்? உட்கார்ந்து முக்கியமான விஷயங்களை எழுதிக்கொள்ளேன்!" என்றதும் வகுப்பே ஆச்சரியத்தில் மூழ்கியது. வகுப்பு முடியும் தறுவாயில் வாத்தியார், "பிள்ளைகளே! நன்ருகப் பரீட்சையை எழுதி மேல் வகுப்புக்குச் செல்லுங்கள். உங்களையும் உங்கள் கோஷ்டத்தையும் விட்டுப் பிரிய எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது" என்ருர்.

அன்று கடைசி நாள் ஆகையால் எல்லா வாத்தியார்களுக்கும் மாலை வாங்கி வைத்திருந்தார்கள் மாணவர்கள். தமிழ் வாத்தியாருக்குக்கூட ஒரு மாலை போட நிச்சயித்திருந்தார்கள். வகுப்புத் தலைவன் மணி மாலையைக் கையில் ஏந்தித் தமிழ் வாத்தியார் அருகில் சென்ருன். "சார், நாங்கள் தெரியாமல் உங்கள் வகுப்பில் மோசமாக நடந்துகொண்டோம். அதை எல்லாம் பொறுத்துக்கொண்டு நீங்கள் எங்களுக்குக் கல்வி கற்பித்தீர்கள். நாங்கள் உங்களுக்கு எவ்விதம் கைம்மாறு செய்வோம்? இந்த அன்பளிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்!" என்று மாலையை அவர் கழுத்திலே போட்டு அவன் அப்பா அவனுக்குக் கொடுத்திருந்த பார்க்கர் பேனுவை வாத்தியார் கையில் கொடுத்தான்.

வகுப்பில், "தமிழ் வாத்தியார் வாழ்க!" என்று கோஷம் வானைப் பிளந்தது.

"என்னிடம்கூட அவன் பேனு

பரிசளிக்கப் போவதாகச் சொல்லவில்லையே'' என்று தங்கம் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஜயந்தியிடம் முறையிட்டாள்.

இதற்கு ஜயந்தி, "படுத்தினது தான் படுத்திஞனே. அதற்கு ஏதாவது பரிகாரம் செய்யலாம் என்று நினைத்திருப்பான்! வாத்தியாரை அவமானப்படுத்த இதிலேயும் ஏதாவது உடைசல் நிப்பை மாட்டி ஓட்டைப் பேஞவைக் கொடுத்திருப்பான்'' என்ருள் பொருமையுடன்.

தமிழ் வாத்தியார் பேஞவை வாங்க மறுத்தார். "மாலையானுலும் பரவாயில்லை; இவ்வளவு விலையுயர்ந்த பொருள் எனக்கு எதற்கப்பா? என் பேஞக் கட்டை இருக்கிறதே. மேலும் எனக்கு உங்கள் அன்பு ஒன்றே போதும்'' என்ருர்.

மணி இதை ஒப்புக்கொள்ளவில்லை. "சிறியோர் நாங்கள் செய்த சிறுபிழையைத் தாங்கள் மன்னித்து இதை ஏற்றுக்கொண்டால்தான் உங்களுக்கு எங்கள்மேல் வெறுப்பில்லை என்று கருதுவோம்'' என்ருன்.

வாத்தியார் மாணவர்களின் அன்பைக் கண்டு ஒரு கணம் திகைத்துவிட்டார். அவர் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. பேஞவும் கையுமாக அவரைப் போட்டோ எடுக்கையில் எழுந்த கரகோஷம் பள்ளி முழுவதும் எதிரொலித்தது.

வனராஜா

ஒரு காட்டில் ஒரு சிங்கம் வந்து சேர்ந்தது. பலசாலியாதலால் அது வனராஜாவாகி விட்டது.

சிங்கம் ராஜாவானதும் காட்டில் உள்ள மற்றப் பிராணிகளுக்கு எல்லாம் ஓர் உத்தரவு இட்டது: 'இனிமேல் யார் எந்த மிருகத்தை வேட்டையாடினுலும் எல்லாரும் அதைப் பங்கிட்டே எடுத்துக்கொள்ள வேண்டும்.' அதை எல்லா மிருகங்களும் ஒப்புக்கொண்டன.

முதல் நாள் புலி கொழுத்த மான் ஒன்றைக் கொன்று சிங்கத்தின் முன் கொண்டுவந்து சேர்த்தது. சிங்கம் அந்த இரையை மூன்று பாகமாகப் பங்கிட்டது. அப்போது, 'மானைக் கொன்ற எனக்கு ஒரு பாகம்; மான் இருக்கும் இடத்தைக் காண்பித்த நரிக்கு ஒரு பாகம்; மற்ருென்று சிங்கராஜாவுக்கு' என்று புலி நினைத்தது.

ஆனல் சிங்கமோ, 'உங்களுடைய ராஜா என்ற முறையில் முதல் பங்கு எனக்கு. உங்கள் எல்லாரையும்விட நான் தானே பலசாலி? அதனுல் இரண்டாவது பங்கும் எனக்கே. மூன்ருவதையும் நான் எடுத்துக்கொள்ளப் போகிறேன். உங்களில் யாருக்காவது தைரியம் இருந்தால் தடுக்கலாம்!'' என்று பிடரியை உதறிக்கொண்டு கர்ஜித்தது. அடுத்த நாள் எல்லா மிருகங்களும் சேர்ந்துகொண்டன. 'இனி நாம் ஒவ்வொருவரும் தனிக்காட்டு ராஜாதான்' என்று கோஷமிட்டன. வனராஜா போன இடம் தெரியவில்லை. —ஈசாப் கதை.

கிரிக்கெட் கற்றுக்கொள்

ராம்சிங்

போட்டோ:
எம். டி. வின்ஸென்ட்

டிரைவ் ஆப் தி பாக் புட்
(Drive off the Back Foot)



1. பொதுவான ஆரம்ப நிலை.

2. கிட்டே வரும் பந்தை அடிப்பதற்குத் தயாராக இருக்கிறார். கண்கள் பந்தையே பார்க்கின்றன. தலை உறுதியாக நிலைத்து இருக்கிறது. பௌலர் விட்டெறிந்த பந்து எப்படி வருகிறது என்பது இதனால் நிதானப்படுகிறது.



3. உடலின் கனத்தைப் பின்கால் பாதம் தாங்குகிறது. மட்டையை மேலே தூக்கியிருக்கிருர்.

4. இரண்டு பக்கமும் சம எடையாக நிற்கும்படி கால் கட்டைவிரல் ‘கவரிங் பாயின்ட்’டை நோக்கியிருக்கிறது.



5. பந்தை அடிக்க நேர் கிழாக மட்டையைப் பிடித்திருக்கிறார். முழங்கை மேலே நன்றாகத் தூக்கி யிருப்பதைக் கவனியுங்கள். முழங்கை இவ்விதம்தான் இருக்கவேண்டும்.



6. பந்தை அடிக்கும்போது முழங்கை உயர்ந்தே இருக்கிறது. பந்தைப் பலங்கொண்ட மட்டும் அடிக்க இந்த நிலை வாட்டமானது.



7. பந்தை வேகமாக அடிக்கிறார். தலையும் காலும் அடித்த திசையையே நோக்கியிருக்கின்றன. இதுதான் சரியான நிலை.



8. அடித்து முடிக்கும்போது உள்ள நிலை இது.

யார், எவ்வளவு?

'மனோஹர்'

1

கர்னல் ராமையா என்பவர் சைனியத்தில் ஓர் அதிகாரி.

"நரசிம்மன் எங்கே?" என்று அவர் கேட்டார்.

"அவன் பாரக்கில் இல்லை" என்றான் சலீம்.

"அவன் வெளியே போயிருக்கிறான்" என்று ராமன் கூறினான்.

"அவன் தபாலில் கடிதம் போடப் போயிருக்கிறான்" என்று சார்லி சொன்னான்.

"அவன் தன் தங்கையைப் பார்க்கப் போயிருக்கிறான்" என்றான் வேணுகோபாலன்.

"சேசே, வேணு சொல்வது தப்பு!" என்றான் தட்சிணாமூர்த்தி.

இத்தனை சைனிகர்களிலும் பொய் சொன்னவன் ஒருவன்தான்; மீதி எல்லாரும் உண்மையே உரைத்தார்கள். அப்படியானால் நரசிம்மன் போன இடம் எது?

2

"உன் பையில் எவ்வளவு பணம் இருக்கிறதென்று நான் சொல்ல முடியும்!" என்று உறுதியாகச் சொன்னான் கோவிந்தன்.

"எப்படி?" என்று கேட்டான் கோபாலன்.

"உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறதோ, அந்த எண்ணிக்கையை இரண்டால் பெருக்கிக்கொள்."

"பெருக்கினேன்."

"அதை மறுபடியும் ஐந்தால் பெருக்கு."

"சரி."

"அந்தத் தொகையைச் சொல்லு."

"நூற்று முப்பது."

"அப்படியானால் உன்னிடமுள்ள பணம் பதின்மூன்று ரூபாய்!" என்று பளிச்சென்று கோவிந்தன் சொன்னான். இதை அவன் எப்படிக் கண்டுபிடித்தான்?

3

$1+2+3-4-5-6+7+8-9+10+11-12=30.$

முதலில் சரியாக இருந்த கணக்கில், கூட்டல் கழித்தல் குறிகளை யாரோ மாற்றி இப்படித் தவறாக வைத்துவிட்டார்கள். திருத்தமான கூட்டல் கழித்தல் குறிகளை அமைத்து இந்தக் கணக்கை நீங்கள் எழுத முடியுமா?

(விடை: 44-ஆம் பக்கம் பார்க்க)

அசட்டுப் பிசட்டுப் பாடல்கள்

நா. ஹ. ஆத்ரேயன்

"அம்மா, நான் நீஞ்சப் போகவா?"
"அடி கண்ணு, கட்டாயம் போயிவா!
தாவணி மட்டும் அவுக்காதே.
தண்ணீலே மட்டும் இறங்காதே.
நீச்சு முடிந்ததும் நிக்காதே ஓடிவா!"

★ ★ ★

அரளி சிவப்பு
ஜவந்தி மஞ்சள்
சக்கரை திதிப்பு
சரோஜாவும் தான்.

★ ★ ★

எனக்கு ஒருத்தரைத் தெரியும்;
அவர் பேர் மாமா.
அவருக்கு ஓர் ஆம்படையாள்;
அவள் பேர் மாமி!

சன்னத சாமி---

'ஜாஜலி'

எங்கள் வீட்டுச்கு எதிர் வீட்டில் மகாலிநகம் மகாலிங்கம் என்று ஒருவன் இருக்கிறான். ஆனால் மகாலிங்கம் என்று சொன்னால் யாருக்கும் புரியாது. சனைத சாமி என்றால்தான் தெரியும். காரணம் இதுதான். அவனுக்கு அடிக்கடி சாமி வந்துவிடும். திடீரென்று திருப்பதி வேங்கடாசலபதி அவன் மீது சன்னதமாகிவிடுவார். ஒரு மணி நேரம் ஆடிவிட்டு மலை ஏறிவிடுவார். நான்கு நாள் கழித்து மாரியாத்தாள் சன்னதமாகி விடுவாள். இன்னொரு நாளைக்கு, "ஹொ ஹொ ஹொ ஹொ, நான் தாண்டா நரசிம்மமூர்த்தி! டேய், இரண்யகசிபு என்கிட்ட என்னபாடு பட்டான் தெரியுமா?....சவ்வரிசிப் பாயசம் வைக்கிறேன்னு சொன்னியே, எங் கேடி வஞ்சகி?" என்று நரசிம்மாவதாரம் கர்ஜனை செய்யும். வாரத்துக்கு இரண்டு தடவையாவது ஏதாவது ஒரு சாமி வராமல் இராது.

மகாலிங்கத்துக்கு அரை ஏக்கர் நிலம் உண்டு. அதுதான் குடும்பத்துக்கு எல்லாச் சொத்தும். அதில் மகாலிங்கம், அவன் மனைவி, அவனுடைய வயதான தாயார் - மூன்று பேரும் சாப்பிடவேண்டும். எப்படிப் போதும்? அந்த நிலம் ஒருவருக்கே அரைவயிற்றுக்குக் காணாது. "ஏதாவது வேலை செய்து சம்பாதித்துப் போட்டால்தானே தேவலாம்? இப்படிச் சும்மாக் குந்திக்

கிட்டிருந்தா சோறு எங்கேயிருந்து கிடைக்கும்?'' என்று அவன் தாயாரும் மனைவியும் எவ்வளவோ சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

ஆனால் மகாலிங்கத்துக்கு உடம்பு வணங்காது. ஏதாவது நிலத்தைக் குத்தகை எடுத்துப் பயிர் செய்தால் மூன்றுபேரும் வயிறாரச் சாப்பிடலாம். அல்லது ஊரிலேயே பண்ணை வேலை செய்யலாம். ஆனால் மகாலிங்கம் சோம்பேறி. ஒன்றும் செய்வதில்லை. நெற்றி, கை, மார்பு எல்லாம் விபூதியைப் பூசிக்கொண்டு கந்த சஷ்டியன்று கோயிலுக்குப் போவான். அங்கு பஜனை நடக்கும். அதில் இவனும் சேர்ந்து பாடுவான்; இல்லை, கத்துவான். அவனுக்கு நல்ல குரலும் கிடையாது. சங்கீத ஞானமும் கிடையாது. கர்ணகடூரமாகக் கத்துவான். காதை அறுத்து எறிந்துவிட்டுத்தான் அந்தப் பாட்டைக் கேட்கவேண்டும்! அவ்வளவு இனிமை! பஜனை பாதி நடக்கும்போது, அவன் கண் சுழலும்; தலை ஆடும். 'ஹோஹோ'வென்று எழுந்து கிளம்பிவிடுவான்; குதிப்பான்; ஓடுவான்; ஆடுவான். அவனுக்குப் பெரிய உடம்பு. ஆர்மோனியப் பெட்டியை மிதிப்பான். குத்துவிளக்கைத் தள்ளிவிடுவான். எல்லோரும் துணியைப் போட்டுக் கட்டிப் பிடிக்கப் போவார்கள். முடியாமல் ஒதுங்கி நிற்பார்கள். "ஏய், நான் தாண்டா முருகன். தோப்பன் சாமிடா, ஏண்டா எனக்குப் பஞ்சாமிர்தம் செய்யலே? செய்யறியா, இல்லியா? இல்லாட்டா உங்களை இன்னும் ஆறு நாளிலே கொண்டுபோய் விடுவேண்டா'' என்று குதிப்பான். "முருகா, முருகா, இந்தவாட்டி அபராதம் பண்ணிட்டோம். மாப்பு விட்டிடு. நாளைக்கே பஞ்சாமிர்தம் பண்ணிப்போட்டுடறோம்'' என்று எல்லோரும் மன்றாடுவார்கள். அப்புறம் கொஞ்ச நேரம் குதித்து விட்டு, 'மடார்' என்று மயக்கம் போட்டவன்போல் விழுந்துவிடுவான். மறுநாள் பஞ்சாமிர்தம் செய்து கோயிலில் முருகனுக்குப் படைப்பார்கள். மகாலிங்கம் பாதி சாப்பிட்டுவிடுவான்.

வைகுண்ட ஏகாதசி வந்தால், மகாலிங்கம் கை, வயிறு, முதுகு எங்கும் நாமம் போட்டுக்கொண்டு கிளப்பிவிடுவான். அன்று ஏதாவது சாமி வராமல் இராது. வேங்கடாசலபதி, நரசிம்ம சாமி, கலியபெருமாள் என்று ஏதாவது வந்துவிடும். "எங்கேடா சர்க்கரைப் பொங்கல்? கண்ணைக் கொண்டுபோயிடுவேண்டா!'' என்று சாமி வந்து சொல்லும். சர்க்கரைப் பொங்கலும் கிடைக்கும். ஊரில் பலர் மகாலிங்கத்தின் பக்தியைப் பாராட்டினார்கள். மகாலிங்கத்தின் தாயாரும் மனைவியும் பயந்துபோய் விட்டார்கள். மகாலிங்கம் பெரிய பக்தன் என்றே அவர்கள் எண்ணினார்கள். "வேலைக்குப் போகக்கூடாதா, கூடாதா?'' என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தவர்கள், கடைசியில் சும்மாவே இருந்துவிட்டார்கள். பெரிய பக்தரைப்போய் வேலைசெய்யச் சொல்லலாமா?

கோயிலுக்குள் வந்துகொண்டிருந்த சாமி இப்போது வீட்டுக்குள்ளேயே வரத் தொடங்கிவிட்டது. ஒரு மாதத்துக்கு ஒருமுறை 'மாரியாத்தாள்' வந்து ஆடும். மாவிளக்குக் கேட்கும். அவன் தாயாரும் மனைவியும் சரியென்று சத்தியம் செய்துவிட்டுச் சூடம் ஏற்றுவார்கள். "ஹூ ஹூ ஹூ ஹூ...இந்தா



விபூதி வாங்கிக்க!'' என்று அவன் கத்துவான். விபூதி வாங்கிக் கொள்வார்கள். அப்புறம் மலை ஏறிவிடுவாள் மாரியம்மா. பத்து நாள் கழித்து, 'கலியபெருமாள்' சன்னதமாகும். ''எங்கேடி, முருங்கக்கா மோர்க்குழம்பும், பயத்த லட்டுவும்?'' என்று கேட்கும்; ஆடும்.

சிவனே என்று அக்கம் பக்கத்து வீட்டில் எல்லாம் கடன் வாங்கி, மகாலிங்கத்தின் தாயார் மோர்க் குழம்பு, லட்டு, சவ்வரிசிப் பாயசம் என்று சாமி கேட்ட சாமானை எல்லாம் படைத்து விடுவாள்.

விஷயம் முற்றிவிட்டது. சாமி இப்போது வாரத்துக்கு இரண்டு முறை வரத் தொடங்கி விட்டது. உலகத்தில் இருக்கிற சாமி எல்லாம் வந்துவிடும். வந்துவிட்டு வெறுமே போகக் கூடாதா? நெய்ப்பணியாரமாகக் கேட்டுக் கொண்டிருக்கும். குஞ்சாலாடு, அப்பம், அவல் பாயசம்!

எங்கள் வீட்டுக்கு எதிர் வீடா? எங்களுக்கும் தொல்லை தாங்கவில்லை. நாலு நாளைக்கு ஒரு முறை நடுநிசியில் எல்லாரும் அயர்ந்து தூங்கும் போது, மகாலிங்கம், 'ஹாய் ஹோய்' என்று கத்துவான். தூக்கம் கெட்டுவிடும். கிராமத்திலும் பலர் பயந்த ஆசாமிகள். உடனே ஓடிப் போய் இடுப்பில் துணியைக் கட்டிக் கொண்டு மகாலிங்கத்துக்குத் தண்டனிடுவார்கள். ஒரே கூச்சல், இரைச்சல்! இரண்டு மணி நேரம் ரகளை நடக்கும். மனைவியைப்

போட்டு, சாமி வந்த மகாலிங்கம் அடிப்பான். அவளும் அவன் தாயாரும் அழுது கூச்சல் போடுவார்கள்.

"உன் தாலிக் கயிறு பத்திரமாய் இருக்கணுமாடி, பேயே! அப்படின்னு இந்த நரசிம்மத்தை அலட்சியம் பண்ணாதே. ஏழுமலையான் என்னை அனுப்பிச்சிருக்கான்டி, ஞாபகமூட்ட! கோழி காவு கொடுக்கிறேன்னியே. மறந்து போயிட்டியா?"

மகாலிங்கத்தின் மனைவி கோழி காவு கொடுப்பதாக வேண்டிக் கொள்ளவே இல்லை. ஆனால் சாமி தாலிபத்திரமாக இருக்கவேண்டுமா என்று கேட்டுவிட்டதே! அவள் பயந்து தடித்து மறு நாளைக்கே ஒரு கோழி எங்கிருந்தாவது வாங்கி வந்து பலிகொடுத்துச் சமையல் பண்ணிப் போடுவாள்.

இந்தக் கூச்சலும் ஓலமும் வர வரப் பொறுக்க முடியவில்லை. எங்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டில் இருந்த கோவிந்த உடையாருக்கு அசாத்தியக் கோபம் வந்துவிட்டது. "இந்தப் பயலுக்கு நல்ல புத்திச் சொல்லிக் கொடுக்கிறேன், பாருங்க. சமயம் வரட்டும்" என்று சொல்லிக் கொண்டே இருந்தார்.

பெருமாள் கோயிலில் சித்திரை மாதம் உற்சவம் வந்தது. அன்று இரவு அநுமார் வாகனத்தின்மேல் ஸ்வாமி புறப்பட்டு ஊரை வலம் வந்தது. கோயிலுக்குள்ளும் போய் விட்டது. எல்லாரும் படுத்துக் கொண்டுவிட்டார்கள். ஆனால் எதிர் வீட்டில் உற்சவம் ஆரம்பித்து விட்டது. ஒரே இரைச்சல்; இரவு பன்னிரண்டு மணி.

"லங்கையைத் தாண்டின வண்டீ, உன்னைச் சும்மா விடமாட்டேன். எங்கடி தேன் குப்பி? மொந்த வாழைப்பழம் எங்கே?" என்று கூச்சல் கேட்டது.

மகாலிங்கத்தின்மேல் அநுமார் சன்னதமாகிவிட்டார். எல்லா நாளையும்விட ஆர்ப்பாட்டம் இன்று அதிகம். அநுமார் தாண்டித் தாண்டிக் குதிக்கிறார். திண்ணையில் படுத்திருந்த எங்களுக்குத் தூக்கம் கெட்டுவிட்டது. திடீரென்று உடையார் வந்தார். "நீங்கள் எல்லாரும் போய் அநுமாரை மலை ஏறிவிடாமல் பார்த்துக்குங்க. நான் அஞ்சு நிமிஷத்தில் வறேன்" என்று சொல்லிவிட்டுப் போனார். நாங்கள் மகாலிங்கத்தின் வீட்டுக்குள் நுழைந்தோம். எங்களைக் கண்டதும் இன்னும் எட்டி எட்டிக் குதித்தார் அநுமார். கொம்புத்தேன் கேட்டார். சீதையைத் தேடிவிட்டுத் திரும்பும் போது, அங்கதன் முதலான வானரர்களோடு மதுவனத்தில் புகுந்து அட்டகாசம் செய்து, தேன் குடித்தது தானும். அப்புறம் தேனே குடிக்கவில்லையாம். மகாலிங்கத்தின் மனைவியின் தலைமயிர் 'அநுமார்' கையில் சிக்கித் தவித்தது. "தாறேன், தாறேன்" என்று அவள் அழுதாள்.

ஐந்து நிமிஷமாயிற்று. "டெ டெ டெ டெ டேய், வந்துட்டேண்டா, இதோ வந்துட்டேன்!" என்று ஊரே கிடுகிடுக்க, ஒரு முழக்கம் கேட்டது. மறுகணம் உள்ளே ஓடிவந்தது ஓர் உருவம். "இதோ வந்துட்டேண்டா! கோதண்டபாணி, ராமசந்திரப் பிரபுடா" என்று அது குதித்தது. இடுப்பில் பட்டு வேஷ்டியால் ஒரு கச்சம். கையில் பெரிய மூங்கில் வில்.

இடது கையில் ஒரு பிரம்பு; அதாவது அம்பு. உடையார்தான் ராமன் வேஷத்தில் வந்துவிட்டார். அநுமாருக்கு மேலானவர் ராமன் தானே? அவரைக் கண்டு அநுமார் பயப்படாமல் என்ன செய்வது? இருந்தாலும் இந்த அநுமார் பயப்படவில்லை.

"யாருடா நீ, அல்பப் பயலே?" என்று அநுமார் கர்ஜித்தார்.

"என்ன சொன்னே, அல்பப் பயலா! ராமன்டா, உன் எஜமான் டா! கோதண்டத்தைப் பார்த்தியா?" என்றார் ராமன். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்துவிட்டார். அநுமாரின் தலை மயிரைப் பிடித்திழுத்துக் கீழே வளைத்து முதுகில் குத்தத்தொடங்கினார். ஒரு குத்து, இரண்டு குத்து, மூன்று நாலு, ஐந்து, பத்து, இருபது, முப்பது - குத்து விழுந்துகொண்டே இருக்கிறது. நிற்கிற வழியாக இல்லை. நடு நடுவே மூடியிருந்த கை பிரிந்து, 'பொடேர் பொடேர்' என்று அறையாகவும் விழுந்தது. நிஜ அநுமாரே அந்த அடியைத் தாங்கியிருக்க முடியுமோ, என்னவோ?

"இனிமே இல்லே, இல்லே, என்னை விட்டுடுங்கோ. விட்டுடுங்கோ" என்று அநுமார் அலறினார். அவர் சிண்டு ராமர் கையில் இருந்தது.

"ஏய், குரங்கே! எங்கேடா வந்தே இங்கே? தேனு வேணும்? இந்தா தேன்!" - இன்னொரு குத்து.

"அப்பா!"

இன்னும் ஒரு குத்து.

"ஐயோ, ஐயோ, ராமா! என்னை விட்டுடேன்."

"முடியாது."

அநுமார் ராமன் காலில் விழுந்தார். ஆனால் அடி நிற்கவில்லை.

"என்னை விட்டுடுங்களேன், விட்டுங்களேன், உடையார் ஐயா" என்று கத்தினார் அநுமார். ஹோவென்று அழுதார்.

"எலே, உடையார் ஐயாவா? ராமண்டா நான்!" - இன்னும் நாலு குத்து.

"நீங்க ராமன் தான். என்னை விட்டுடுங்களேன்."

"இனிமே இங்கே வருவியா?"

"வரமாட்டேன்."

"நீ மாத்திரமா, கலியபெருமாள், மாரியாத்தா, நரசிம்மம் யாரும் மூச்சுக் காட்டப்படாது."

"யாரும் வரமாட்டாங்க.... ஐயோ, என்னை விட்டுடுங்களேன். உயிர் போயிடும் போலிருக்கே."

"போக்கிரிப் பயலே, இனிமே இந்த வேஷம் எல்லாம் போட்டியோ உன்னைத் தண்ணியிலே அமுக்கிப்புடுவேன்."

எங்களுக்கு முதலில் சிரிப்புத் தாங்கவில்லை. ஆனால் உடையார் மகாலிங்கத்தைக் கொன்றே தீர்த்து விடுவார் போலிருந்தது. நாங்கள் குறுக்கிட்டு, "உடையாரே, விட்டுடுங்க. அதான் இனிமேல் செய்யமாட்டேன்னு சொல்லிவிட்டானே" என்று தடுத்தோம். அப்புறந்தான் அடி நின்றது.

அதற்குப் பிறகு ஒரு சாமியும் மகாலிங்கத்தின் மீது வருவதில்லை. மகாலிங்கம் இப்போது உடையார் பண்ணையிலேயே வேலை செய்து வருகிறான். எங்களுக்கும் நல்ல தூக்கம் வருகிறது.

திருடன் தப்பிவிட்டான்

ஸி. ரங்கநாதன்

சூரியன் மலைவாயில் விழுந்து மறைந்துவிட்டான். மணி சுமார் ஏழு இருக்கும்.

வக்கீல் சிவராமனுடைய வீட்டுத் திண்ணையில் அவருடைய குழந்தைகள் ராஜு, ரகு, சீனு, பாரிஜாதம் ஆகிய நால்வரும் காரம்போர்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள். பக்கத்தில் வயதான பாட்டி உட்கார்ந்திருந்தாள். அவள் சிவராமனுடைய தாயார்தான். அப்போது தோட்டக்காரன் சுப்பன் ஒரு பெரிய சட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தான்.

பாட்டி: யாரு, சுப்பனா? எதற்கடா சட்டி!

ராஜு: அப்பாதான் வாங்கி வரச்சொன்னார் பாட்டி. வெயில் காலம் இல்லையா?

பாட்டி: ஆமாம், இதோடு ஆயிரம் சட்டி வாங்கி உடைத்து ஓடு பொறுக்கியாச்சு; இது தான் பாக்கி.

ராஜு: நான்தான் பாட்டி, அதுலே எக்ஸ்பர்ட்!

எல்லோரும் பாட்டியைப் பார்த்துக் கைகொட்டிச் சிரித்தார்கள். பாட்டிக்குப் பிரமாதமாகக் கோபம் வந்துவிட்டது. ஆனால் அதை எப்படியோ அடக்கிக் கொண்டு, "சுப்பா! அதை அந்தத் திண்ணை மூலையில் வைத்துவிட்டுப் போ" என்றாள். சுப்பன் பானையை வைத்துவிட்டுப் போனான். "இந்த தடிப் பிள்ளைகளுக்கு இருக்கிற திமிரைப்பார். சொந்தப் பாட்டியையே ஏளனம் செய்கிறார்கள். விளக்கு வைத்து ஒரு மணிநேரம் படிக்க வேண்டாமோ? இதெல்லாம் யார் சொல்லுகிறது!" என்றாள் பாட்டி.

இதற்குள் சிவராமன் கடை வீதியிலிருந்து

இரண்டு பெரிய பைகளில் காய்கறி வாங்கித் தூக்கிக்கொண்டு வந்தார். அவர் ரொம்ப நல்லவர். ஆனால் குழந்தைகளுக்குச் செல்லம் கொடுப்பார். பாட்டி சொன்னதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டே உள்ளே போய் விட்டார். மணி எட்டு அடித்தது. சிவராமன் மனைவி எல்லாரையும் சாப்பிடக் கூப்பிட்டாள்.

ரகு: கொஞ்சம் இரு, அம்மா! ஒரே ஆட்டம்.

பாட்டி: நாங்களெல்லாம் அந்தக் காலத்தில் விளக்கு வைத்ததும் சாப்பிட்டுவிடுவோம்.

சீனு: போரும் பாட்டி, உன் பழங்கதை!

பாட்டி: நன்றாக இருக்கிறது பேச்சு. போய்ச் சாப்பிடுங்களடா! சாப்பிட்டுவிட்டு உடனே படுத்துக்கொண்டால் சாப்பிட்டதெல்லாம் ஜீரணம் ஆகாமல் சரியாகத் தூக்கம் வராது. சாப்பிட்ட பிறகு குறைந்தது ஒரு மணி நேரம் கழித்துத்தான் படுக்கைக்குப் போகவேண்டும். அப்புறம் விளையாடலாம். போங்கள்!

ரகு: சரிதான் பாட்டி. நாங்களும் சயன்ஸ் படிச்சிருக்கோம். கதை அளக்காதே.

ஓர் ஆட்டம் முடிந்தது. எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள். பாட்டி திண்ணையிலேயே உட்கார்ந்திருந்தாள். சுப்பன் அங்கு வந்து அதற்கு முந்தின இரவு அடுத்த வீதியில் திருட்டுப்போன கதைகளைப் பாட்டியிடம் அளந்தான். அவைகளைக் கேட்ட பாட்டி, "இப்பொழுது அதையெல்லாம் சொல்லாதே. குழந்தைகள் பயந்து கொள்வார்கள்" என்றாள்.

அதே சமயம் சாப்பிட்டுக்கொண்டிருந்த ராஜு, சீனு, பாரிஜாதம் ஆகியவர்களுக்கு நடுக்கம் ஏற்பட்டது. ஆனால் ரகு அவர்களுக்குள் கொஞ்சம் தைரியம் உள்ளவன். பாரிஜாதத்துக்குத்தான் அதிகப் பயம் ஏற்பட்டது.

* * *

இரவு மணி பன்னிரண்டு இருக்கும். நடுக் கூடத்தில் எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். சீனு மாத்திரம் பக்கத்து அறையில் படுத்துக்கொண்டிருந்தான். ஏதோ சத்தம் கேட்டதும் அவன் மெதுவாகக் கண்ணைத் திறந்தான். அவனுக்கு ஒரு மனிதன் வெள்ளை புஷ்கோட்டும், ஹாட்டும் அணிந்துகொண்டு சற்றுத் தூரத்தில் நிற்பது தெரிந்தது. அடுத்த கணமே கண்ணை மூடிக்கொண்டு கத்துவதற்குப் பிரயத்தனம் செய்தான். ஆனால் பயத்தினால் தொண்டையை அடைத்தது. கத்த முடியவில்லை. தன் போர்வையை இழுத்து, தலையிலிருந்து கால்வரையில் போர்த்திக்கொண்டான். அதற்குமேல் ஒரு தடவையாவது போர்வையைத் தள்ளிப் பார்க்க அவனுக்குத் தைரியமில்லை.

சரியான தூக்கம் வராததால் பாரிஜாதம் புரண்டு புரண்டு படுத்தாள். அவளுக்கு எப்பொழுதுமே பயம்தான். அப்படியிருக்க, சீனு படுத்திருந்த அறையிலிருந்து ஏதோ பெரிய

சத்தம் கேட்டதும் உடனே எழுந்து, "திருடன், திருடன்!" என்று கத்தினாள். அவள் பக்கத்தில் தூங்கிக்கொண்டிருந்த ராஜு அந்தச் சத்தத்தில் எழுந்து, பக்கத்தில் இருந்த ஒரு கட்டையை எடுத்துக்கொண்டு, அசட்டுத் தைரியத்துடன் திண்ணைக்குச் செல்லும் கதவை திறந்துகொண்டு ஓடினான். ரகுவும் ஒன்றும் புரியாமல் ஏதோ ஒரு பக்கம் ஓடினான்.

* * *

ராஜு சுற்றும் முற்றும் பார்த்தான். சில நிமிஷத்தில் அவனுக்குத் திண்ணையின் மூலையில் ஒரு கறுப்பான உருவம் உட்கார்ந்துகொண்டிருப்பது நன்றாகத் தெரிந்தது. அது பெரிதாகவும் கறுப்பு உடை அணிந்திருப்பதாகவும் தோன்றியது. அவனுக்கு நடுக்கம் எடுத்தது. கட்டையை விறகு வெட்டுவனைப் போல உயரத் தூக்கி, தன் பலம் கொண்டமட்டும் அந்த உருவத்தை நோக்கி வீசினான்.

அதே சமயம் சீனு தன்னுடைய கைகளை ஏதோ ஓர் உருவம் கெட்டியாகப் பிடித்ததை உணர்ந்தான். இருட்டாக இருந்ததால் அவ்வுருவத்தை அவனால் சரியாகப் பார்க்க முடியவில்லை. சீனு தன் மேல் போர்வையைப் போர்த்திய ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் சத்தம் கேட்டதும், அதைத் தொடர்ந்து பாரிஜாதம் கத்தியதும், திருடன்தான் வந்திருக்கிறான் என்று ஒரே கூச்சலாகப் போட ஆரம்பித்தான். அப்போது அவ்வுருவம் அவன் கையை அமுக்கிப் பிடித்ததுடன் வாயையும் பொத்தியது. சீனுவுக்கு உடம்பெல்லாம் குப்பென்று வேர்த்தது. இருதயம் நின்று விடும்போல் இருந்தது.

இந்த அமர்க்களங்களினால் எழுந்த சிவராமன் என்னவோ ஏதோ என்று பரபரப்புடன் எல்லா ஸ்விட்சுகளையும் போட்டார். எங்கும் வெளிச்சம் பரவியது.

* * *

வெளிச்சத்தில் பார்த்தால் ராஜு கையில் தடியுடன்

வெட்கத்துடன் நிற்கிறான். அவனுக்குப் பக்கத்தில், அவன் திருடன் என நினைத்து உடைத்த சட்டி தூள் தூளாகப் போய்க் கிடந்தது. அந்த வேடிக்கையைப் பார்த்துவிட்டு, ராஜு பின்தொடர சிவராமன் வேகமாகச் சீனு இருந்த அறைக்குச் சென்றார்.

அங்கே சீனு மிகவும் பயந்து போய், பார்ப்பதற்குப் பரிதாபமாக நின்றுகொண்டிருந்தான். பக்கத்தில் ரகு சிறிது புன்னகையுடன் நின்றுகொண்டிருந்தான். சத்தம் கேட்டதும் ரகு ஓடினான் அல்லவா? சீனு கத்துவதைப் பார்த்து அவனைப் போய்ப் பிடித்திருக்கிறான். முதலிலேயே புஷ் கோட் ஆளைப் பார்த்திருந்ததால் ரகு அவன் கையைப் பிடித்தவுடன் யாரோ திருடன் பிடித்ததாக எண்ணிக் கத்திவிட்டான். தான் பார்த்த புஷ் கோட் ஆள் எங்கே என்பதைத் தெரிந்து கொள்வதற்காகச் சீனு அறையைச் சுற்றிலும் பார்த்தான்.

அந்த அறையின் ஒரு பக்கத்தில் சிவராமனுடைய கோட் ஸ்டாண்டில் அவருடைய புஷ் கோட் மடிப்புக் கலையாமல் ஒரு கட்டையில் பொருத்தித் தொங்கவிட்டிருந்தது அதன் மேல்புறத்தில் அவருடைய ஹாட் மாட்டியிருந்தது. இதையா கண்டு பயப்பட்டோம் என்று சீனு தன் முட்டாள்தனத்தை நினைத்து வெட்கப்பட்டான்.

இதற்குள் எல்லாரும் அங்கே வந்துவிட்டனர். நடந்ததைக் கேட்டு எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். பாரிஜாதம், தான் முதலில் கத்தியதைச் சொன்னாள். ராஜு, தான் சட்டி உடைத்ததைச் சொன்னான். இதையெல்லாம் கேட்டு அவர்களே மேலும் மேலும் சிரித்தனர்.

எல்லோரும் சத்தம் எப்படி ஏற்பட்டது என்று பார்த்தார்கள். அந்த அறையின் ஒரு மூலையில் சட்டத்தின் மேல் இருந்த ஓர் ஆணி டப்பா கீழே விழுந்து சிதறிக் கிடந்தது. 'நான்தான் தள்ளிவிட்டு இவ்வளவு நேரமும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்' என்று சொல்வதுபோல் பெஞ்சியின் அடியில் யாருக்கும் தெரியாமல் படுத்திருந்த பூனை அவர்கள் எல்லாருக்கும் நடுவில் பாய்ந்தோடி வெளியேறியது.

தாயார்: கோபு! பள்ளிக்கூடத்திலிருந்து வரும்பொழுது செருப்பை மறந்துவிடாமல் போட்டு வா!

கோபு: ஆகட்டும் அம்மா!

தாயார்: எங்கேடா செருப்பு?

கோபு: நீதானே மறக்காமல் போட்டுவரச் சொன்னே?

எண்ணிலே படங்கள்

(1 முதல் 9 வரை) ‘மூட்டை’









அவயவங்களின் வேலை நிறுத்தம்

'சோமசன்மா'

சமீப காலத்தில் சென்னையில் ராமன் என்று ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரு கம்பெனியில் உத்தியோகம். தினமும் காலையில் எட்டு மணிக்குக் காரியாலயத்துக்குப் போவான். ராத்திரி எட்டு மணிக்குத்தான் திரும்பி வருவான். வந்ததும் சாப்பிட்டு விட்டுப் பத்து மணிக்கு எல்லாம் படுத்துக்கொண்டு உடனே தூங்கிவிடுவான்.

இப்படியாக ஒருநாள் தவறுமல் நடந்துகொண்டு வருகையில், ஒரு நாள் இரவு அவன் படுத்துத் தூங்கிக்கொண் டிருந்தான். அப்போது அவனுடைய கால்மட்டும் புரண்டு புரண்டு படுத்தது. அதைக் கண்ட அவனுடைய கை, "என்னப்பா கால்! என்ன இன்னும் தூங்கவில்லை?" என்று கேட்டது.

அதைக் கேட்ட கால் சொல்லும்: "இன்றைக்குக் காலையில் நம் எஜமான் ஆபீசுக்குப் போகிறபோது டிராமுக்கு நேரமாகி விட்டது. அதனால் ஓடும் டிராமைப் பிடிப்பதற்காக நானும் வேகமாக ஓடினேன். அதனால் எனக்கு வலிக்கிறது."

கை பதில் சொல்லிற்று: "உனக்கு வலித்தால் யார் அதைப்பற்றிக் கவலைப்படப் போகிறார்கள்? பேசாமல் படுத்துத் தூங்கு."

அதைக் கேட்ட கால், "நீதான் கொஞ்சம் வந்து பிடித்து விடேன். தூங்கிவிடுவேன்" என்றது.

"ஓஹோ! எனக்கு வலித்தால் யார் பிடிக்கிறார்களாம்?"

இந்தக் கேள்விக்குக் காலினால் பதில் சொல்ல முடியவில்லை. அப்போது கை தொண்டையைக் கனைத்துக்கொண்டு பின் வருமாறு மேலும் சொல்லிற்று:—

"அப்பனே! கடவுள் எனக்குப் புத்தியைக் கொடுத்து விட்டான். அதுதான் கஷ்டமாயிருக்கிறது. உனக்கு அந்தக் கவலையே இல்லை. எப்போதும்தான் உனக்குப் பிறருக்கு உழைக்கவே சரியாயிருக்கிறதே. நாம் எல்லோரும் கஷ்டப், பட்டு வேலை செய்கிறோம். ஒருவன் மட்டும் சந்தோஷமாக வேலை செய்யாமல் சாப்பிட்டுவிட்டுத் தூங்குகிறான்."

அதைக் கேட்ட ராமனுடைய வாய், "அது யாரப்பா அப் படித் தூங்குகிறது?" என்று கேட்டது.

கை: அதுவா! தெரியவில்லை? யோசித்துப் பார்!

வாய்: தெரியவில்லையே! எல்லாரும்தான் வேலை செய்கி றோம். கண் பார்க்கிறது. காது கேட்கிறது. நீயும் வேலை செய்கிறாய். கால்தான் கேட்க வேண்டியதில்லை. எப்போதும் ஓடிக்கொண்டே யிருக்கிறது.

கை: உங்களுக்கு எல்லாம் மூளை இருந்தால் இப்படிப் பேசமாட்டீர்கள்! நீ சொல்கிறபடி கண் பார்க்கிறது. காது கேட்கிறது. நீ பேசுகிறாய். கால் வலிக்க வலிக்க நின்று கொண்டே யிருக்கிறது. நானே உழைத்து உழைத்துச் சம்பா திக்கிறேன். ஆனால் இந்த வயிறு இருக்கிறதே இது மட்டும் ஒன்றும் செய்கிறதேயில்லை. நாம் சம்பாதித்துப் போடு கிறதை எல்லாம் சாப்பிட்டுவிட்டு ஏப்பம் விட்டுக்கொண்டு தூங்குகிறது. இது உங்களுக்குத் தெரியவில்லை!

இவ்விதம் கை சொன்னதும் காலும் வாயும், "ஆமாம்! ஆமாம்!" என்று தலையை ஆட்டின. இதற்குள் காதும் கண்ணும் விழித்துக்கொண்டு அவைகளோடு சேர்ந்துகொண்டன.

அப்போது கை மேலும் சொல்லும்: "சகோதரர்களே! நாம்மட்டும் எதற்காக ஆயுசு முழுவதும் உழைத்துக்கொண்டே இருக்கவேண்டும்? இந்தத் தொங்கிப் பயலுக்காக நாம் ஏன் வேலை செய்யவேண்டும்? அவனும் வேலை செய்யட்டும். இல்லையேல் நாம் வேலை செய்வதை நிறுத்திவிடுவோம்!"

உடனே மற்ற அவயவங்களும், "நீங்கள் சொல்வது சரி! நீங்கள் சொல்வது சரி!" என்று கூச்சல் போட்டன.

அதனால் அன்றுமுதல் ராமனுடைய உறுப்புக்கள் எல்லாம்

அதாவது, வயிற்றைத் தவிர மற்ற உறுப்புக்கள் எல்லாம் வேலை நிறுத்தம் செய்தன.

கண் இறுக மூடிக்கொண்டது. காது ஒன்றையுமே கேட்பதில்லை. கால்கள் கீழே நீட்டிக்கொண்டு எழுந்திருக்க மறுத்தன. கையோ கேட்கவேண்டியதில்லை; ஒன்றையும் தூக்குவதில்லை. ஆகாரத்தைத் தொடுவதே இல்லை. வாய் இறுகப் பொத்திக்கொண்டது. ஒருவருடனும் பேசுவதில்லை.

இப்படியாக இரண்டு நாள் ஆனதும் ராமனுடைய உடம்பு மெலிந்துவிட்டது. அப்படியே அசையாமல் பேச்சுமூச்சு இல்லாமல் கிடந்தான். சாப்பாடே இல்லாமல் கிடந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்?

பார்த்தவர்கள் எல்லாரும் செத்துத்தான் போய்விட்டானோ என்று நினைத்து ஆஸ்பத்திரியில் தூக்கிக்கொண்டு போய் விட்டார்கள். டாக்டர் உடம்பையெல்லாம் பரீட்சை

பண்ணிப் பார்த்தார். ஆள் சாகவில்லையென்று தெரிந்ததும் அவனுக்கு மருந்து கொடுத்தார். அதாவது, மருந்தை வாயில் ஊற்றுவதற்காகக் கொண்டுபோனார். வாய் திறந்தால் தானே ஊற்ற முடியும்?

வாயைத் திறந்து பார்த்தால், திறக்க முடியவில்லை. அவர் விட்டு விடுவாரா? டாக்டர் அல்லவா? அதனால் மருந்தை எடுத்து ஊசி மூலமாய் உடம்புக்குள் ஏற்றினார். அதன் பிறகு அவனுக்கு ஆகாரம் கொடுப்பதற்காகக் கஞ்சியை வாய்க்குள் ஊற்றப் போனார். அப்போதும் வாய் திறக்கவில்லை. உடனே ஆகாரத்தையும் ஊசி வழியாக ஏற்றிவிட்டார். அதனால் ராமன் பிழைத்துவிட்டான். அவனுடைய வயிற்றுக்கும் ஆகாரம் போய்விட்டது.

அன்று ராத்திரி என்ன ஆயிற்று? எல்லாரும் தூங்கின பிறகு ராமனுடைய கண்கள் மெதுவாய்த் திறந்து பார்த்தன. வாயைப் பார்த்துக் கண்கள் கேட்டன: “டேய் வாய்! பார்த்தாயா! நம்முடைய தயவு இல்லாமலேயே வயிற்றுப்பயல் சாப்பிட்டுவிட்டான்!”

“ஆமாம்! அது எனக்குத்தான் அவமானம்! என் உதவியில்லாமல் சாப்பிடவே முடியாது என்று நான் நினைத்தேன். இப்போது மூக்கு உடைந்துவிட்டது!” என்றது வாய்.

“நம்முடைய தலைவன் கையைக் கேட்போம்” என்றது கண்.

ஆனால் கை பேசவேயில்லை. தூங்குவதைப்போல் பாசாங்கு செய்துகொண்டு கிடந்தது.

அப்போது யாரோ, ‘கட கட’வென்று சிரிக்கும் சத்தம் கேட்டது. உடனே எல்லாம் திரும்பிப் பார்த்தன.

“என்னடா, விழிக்கிறீர்கள்! நான்தாண்டா, தொந்திப் பயல்!” என்றது வயிறு. அதுதான் அப்படிச் சிரித்தது. அது மேலும் சொல்லும்: “ஏ முட்டாள்களே! உங்களால்தான் உலகத்தில் எல்லாம் நடக்கிறது என்று கர்வத்துடன் இருந்தீர்கள்! இப்போதாவது தெரிந்ததா? உங்களைத் தவிர வேறு யாரும் வேலை செய்வதில்லை என்று நினைத்துக்கொண்டிருந்தீர்கள். நானும் வேலைதான் செய்கிறேன். ஆனால் உங்களைப் போல் தம்பட்டம் கொட்டுவதில்லை. நான் செய்யும் வேலைதான் முக்கியமானது. நீங்கள் சம்பாதிக்கும் ஆகாரத்தை ராத்திரி முழுவதும் நான் ஜீரணம் செய்கிறேன். அப்படி நான் செய்யாவிட்டால் உங்களுக்கு எல்லாம் ரத்த ஓட்டம் இருக்காது. நீங்கள் செத்துப்போய் விடுவீர்கள். இப்போதாவது உங்களுக்குப் புரிந்ததா?”

இவ்விதம் வயிறு சொன்னதும் மற்ற அவயவங்கள் எல்லாம் வெட்கத்தால் தலை குனிந்தன.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(C) 83. சொக்கலிங்கம், P. K., கவுந்தப்பாடி. 84. சென்னகிருஷ்ணன், R., திருவண்ணாமலை. 85. செல்லப்பா, S., பேராதனை, சிலோன். 86. சந்திரசேகரன், T. G., தம்மனூர். 87. சக்கரவர்த்தி, R., கல்கத்தா - 29. 89. சிதம்பரம், திருநெல்வேலி டவுன். 90. சின்னையன், M., ஆலூர். 91. சொக்கலிங்கம், C. P., சேலம். ஜ. 92. சந்திரசேகரன், சிவானந்தம், K. P., சங்ககிரி. 93. சந்திரசேகரன், K., திருக்கழுக்குன்றம். 94. செல்லத்துரை, K., தென்மதுரை. 95. சின்னையா, K., தங்கோமாலியம். 96. சின்னச்சாமி, அம்போத்தி. 97. சக்கரபாணி, B., நெகமம். 98. சந்திரசேகர்., M. R., வேலூர். 99 செல்லப்பன், A. N., அரிமளம், 100. சிதம்பரம், A. N., கோத்தமங்கலம். 101. சந்திரன், சாரதா, மூர்த்தி, சீதா, R. P., திருநெல்வேலி. 102. சொக்கலிங்கம், E., திருநெல்வேலி 103. செல்வமணி, தெவிட்டாக்கனி, தஞ்சாவூர். 104. சந்திரபோஸ், R. S., திருவண்ணாமலை. 105. சின்னச்சாமி, C., சேப்பாளையம். 106. சார்லஸ் எட்வர்டு, சென்னை-4 107. சந்திரமௌலி, S, திருவள்ளூர். 108. செரியன், N., விழுப்புரம். 110. சூடாமணி, ரங்கமணி, ஸ்ரீநிவாஸன், V., கல்கத்தா - 26 111. சந்திரவதி, P. K., சென்னை - 17. 112. செங்கல்வராயன், R., சென்னை-1. 113. சாவித்திரி, J. K., சென்னை-4. 114. சந்திரசேகரன், M. R., சென்னை-17. 115. சொக்கம்மாள், D, சென்னை-2. 116. செல்வராஜா, K. A., கொழும்பு-15. 117. சொக்கலிங்கம். C. P., ஈரோடு. 118. சாண்டில், S., கோயம்புத்தூர். 119. செல்லம்மாள், P. S., அமிஞ்சிக்கரை. 120. சந்திரசேகரன், S., கரூர்.

(D) 74. தர்மர், A., நாராயணம்மாள்புரம். 75. தாமோதரம், R., கோயம்புத்தூர். 76. தனலக்ஷ்மி, S., கொட்டாஞ்சேனை. 77. துரைராஜ், T., அதிராம்பட்டணம். 78. தக்ஷிணாமூர்த்தி, S., தங்கோமாலியம். 79. தண்டபாணி, K., கடலூர், N. T. 80. தர்மலிங்கம், M.. கொழும்பு. 81. துரைசாமி, S., (விலாசம் எழுதவில்லை) 82. தனலக்ஷ்மி, V., சென்னை. 4- 83. தண்டபாணி, A., தாராபுரம். 84. டேவிட் ராஜ், திருச்சி. 85. சேவி பிரிட்டோ, கோட்டஹேனை, 86. தர்மலிங்கம், N. R., சென்னை-5 87. தாமஸ், A., கொழும்பு.

இங்கே கத்தரியுங்கள்.

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..............................

(தேதி, மாதம், வருஷம்)

ஆகஸ்டு '51 கூபன் நெ.

88. துரைரத்தினவதி, D., யாழ்ப்பாணம். 89. தேவராஜன். P., பழைய வண்ணாரப்பேட்டை. 90. தனபாலசிங்கம், கமலா, S., யாழ்ப்பாணம். 91. டில்லி பாஷா, P. R., சென்னை-1. 92. தாஸன், P., வண்ணாரப்பேட்டை. 93. துள்சிராமன், V., சைதாப்பேட்டை. 94. துரைசாமி, K. J., திருவையாறு. 95. தர்மன், N., உளிக்கல். 96. தனுஷ்கோடி. N., மட்டப்பாறை. 97. துரைராஜ், R., வளவனூர். 98. துரைசிங்கம், S. V., அபிராமம். 99. தேவராஜன். R., செவ்வாய்ப்பேட்டை. 100, தண்டபாணி, A., நெகமம்.

(E) 19 இருளப்பன், P., சின்னக் காஞ்சீபுரம். 20. ஏழுமலை T. M., திருமழிசை. 21. ஈசுவரன் S., கோபிசெட்டிப் பாளையம். 22. எட்வர்ட் லேக்ரண்ட், கொழும்பு. 23. இமானுவல் ராஜ், கொழும்பு.

★★★★★★★★★★★★★★★★

க ண் ண ன்

கழகம்

புதிதாகச் சேரும் அங்கத்தினர்கள் 1951-ஆம் வருஷக் கூபன்களைத்தான் அனுப்ப வேணடும். 1950-ஆம் வருஷக் கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★★

24. ஏகாம்பரம், R., சிவகங்கை. 25. எதிராஜுலு. P., சென்னை-21. 26. இமானுவல், N., சென்னை-14. 27. ஈசுவரன், தத்தாத்ரேயன், T. V., சென்னை, 18. 28. இளங்கோவன், P. K., பாப்பாம்பாளையம். 29. இருளப்பன், S., மாராச்சிரெட்டிபட்டி. 30 ஈசுவரன், K., சென்னை-5. 31. ஏகாம்பரம், சென்னை-4. 32. ஈசுவர், B., புதுடில்லி. 33. ஈசுவரன், V. R., பெரம்பூர். 34. இளைஞர் ஞானோதய சங்கம், கொழும்பு. 35. இளங்கலைஞன், வளவனூர். 36. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், சிவகங்கை. 37. இதயதுல்லாகான், அப்துல் சலாம், கும்பகோணம். 38 இக்பால் அகமது, திருச்சி. 39. ஏகாம்பரம், T. R., சென்னை-1 40. ஈசுவரன், M. E., யாழ்ப்பாணம்.

(F) 9 பரூக், M., குருநாகல். 10. பிரான்ஸிஸ், A., தொழுதாவூர். 11. பிரான்ஸிஸ், R. X., சென்னை-13. 12. பிராங்க்ளின், சந்திரா, A., சென்னை-2. 13. பாஸிக், A., யாழ்ப்பாணம். 14. பிரான்ஸிஸ், D. A., கொழும்பு 2.

(G) 141. கணேசன், T., சிவகாசி. 142. கோபாலகிருஷ்ணன், V., திண்டுக்கல். 143. கோபாலன், M R., சென்னை-2. 144. குருநாதன், (விலாசம் எழுதவில்லை) 145. கணேசன், G., திரிகோணமலை. 146. ஜீவேந்திரன், பட்டாமி, திண்டிவனம். 147. கோபாலகிருஷ்ணன், செல்லம், வெங்கடரமணன், ஈரோடு. 148. கோபாலன், G., கோட்டூர், துகிலி. 149. கணேசன், T., சிவகாசி. 150. கணராஜன், T., இடையான்குடி. 151. கோமதி, G., சின்னம்பனூர். 152. கணேசன், N., திருச்சி. 153. கணபதி, K., தூத்துக்குடி. 154. குருசாமி, R., திருக்கோகர்ணம்.

(மீதி அடுத்த இதழில்)

ஜக்கு துப்பறிகிறான்

'ஆர்வி'

உல்பையும் கந்துவையும் பார்த்து ஜக்கு முதலிலிருந்தே எல்லாவற்றையும் சொல்லத் தொடங்கினான்:

* * *

ஒருநாள் நான் டார்ஜான் படத்துக்குப் போவதாக இருந்தேன். திடீரென்று இந்த அருணாசலம் என்பவர் எனக்கு போன் செய்தார். என் மாமா ஏஜெண்டாக இருக்கும் பாங்கில் அவர் ஒரு குமாஸ்தா என்று சொல்லிக்கொண்டார். என்னை உடனே பார்க்க வேண்டும் என்றார். பிறகு நானே அடையாறு பாலத்தடிக்கு வந்து சேருவதாகச் சொன்னேன்.

என் பெயர் இந்த மனுஷனுக்கு எப்படித் தெரிந்தது என்று எனக்கு யோசனையாக இருந்தது. பஸ் ஏறும்போது சோனி முதலியவர்களைப் பார்த்ததும் என் சந்தேகம் வலுத்தது. 'சரி; ஏதோ விஷயம் நடந்திருக்கிறது' என்று தெரிந்துவிட்டது. இருந்தாலும் நான் போனேன்.

அதன் பிறகு நான் பாழடைந்த பங்களாவுக்குப் போனது, அருணாசலத்தைச் சந்தித்தது, மேலே ஏதோ சத்தம் கேட்டது, அருணாசலம் தடுத்தும் நான் கேட்காமல் உள்ளே நுழைந்தது, அணில் கத்தியது, மாடியில் சாவி கிடைத்தது-எல்லாம் உங்களுக்கே தெரிந்த விஷயங்கள் தான்.

இனிமேல் சொல்லப் போகும் விஷயங்கள் தான் உங்களுக்குத் தெரியாது.

இந்தச் சாவி எது? இந்த ரெட்டியார் யார் என்று நீங்கள் கேட்டீர்கள் அல்லவா? அதைத்தான் சொல்லப் போகிறேன்.

இந்தச் சாவிதான் அந்த ரெட்டியாரைப் பிடித்துக் கொடுத்த சாவி. இது இல்லாவிட்டால் ரெட்டியாரை லேசில் கண்டுபிடிக்க முடியாது. ரெட்டியார் இந்த ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்தவராம். ஜமீன் எல்லாம் போய்விடவே ரெட்டியார் பாடு மிகவும் திண்டாட்டமாகிவிட்டதாம். அவரோடு இந்த டிக்கி என்பவன் வந்து சேர்ந்தான். இரண்டு பேருமாகச் சேர்ந்துகொண்டு திருட்டுத்தனமாகக் கள்ள நோட்டுகளும் நாணயங்களும் தயாரிக்க ஏற்பாடு செய்தார்கள். அரண்மனைபோன்ற இந்தப் பங்களாவில் மிகவும் பத்திரமான ஓரிடத்தை இதற்காக உப

யோசித்துக்கொண்டார்கள். அந்த இடத்துக்குப் போகவேண்டுமானால் வெறும் சாவிமட்டும் இருந்தால் போதாது. சுவிச்சு ஒன்று பங்களாவில் இருக்கிறது. அதைப் போட்டால்தான் சுவர் விலகும். உள்ளேயிருக்கும் கதவு தெரியும். அது அப்படி இருக்கட்டும்.

என் மாமா பாங்கில் ஏஜெண்டு அல்லவா? என்னைக் கொண்டு பாங்கின் இரும்புப் பெட்டிச் சாவியை எப்படியாவது கொண்டு வரச் செய்துவிடுவது என்பதே ரெட்டியார், டிக்கி இவர்களின் சூழ்ச்சி. அவர்கள் கள்ள நோட்டுகளை மாற்றவேண்டுமே; அதற்காகத்தான் இந்த யோசனை.

வாத்தியார்:—வர வர உன் கையெழுத்து ரொம்ப மோசமாக இருக்கிறதே, ஏன்?

மணி:—நிறுத்தி எழுதினால் தப்பு பளிச்சென்று தெரிகிறது, சார்!



கள்ள நோட்டுகளும் நாணயங்களும் அதிகமாக வெளிவந்து உலாவுகின்றன என்று பல பாங்கிகளிலிருந்து போலீஸாருக்குப் புகார் போயிற்று. இதைக் கண்டுபிடிக்கத்தான் பிரபல துப்பறியும் நிபுணர் அருணாசலம் நியமிக்கப்பட்டிருந்தார்.

அதிருஷ்ட வசமாக இந்த அருணாசலம் என் மாமாவோடு படித்தவர். இது எப்படித் தெரியுமா தெரிந்தது? அன்று ரெட்டியார் அறைக்குள் டெலிபோன் மணி அடித்ததும் நான் பேசினேனே ஞாபகம் இருக்கிறதா? என் மாமாதான் அருணாசலத்தைக் கூப்பிட்டுப் பேசியவர் என்று நான் முதலில் நினைத்தேன். உண்மை அதுவல்ல. அன்று என் மாமாவைப் போலப் பேசியவர் அருணாசலமேதான். என் மாமாவுக்கு ஒரு விஷயமும் தெரியாது. என்னிடம் சாவி கிடைத்து விட்டது என்பது அருணாசலத்துக்கு தெரியாது. ஆனால் நான் மட்டும் அருணாசலம் யாரென்பதைத் தெரிந்துகொண்டு விட்டேன். அருணாசலம் நிழல்போல அந்தப் பங்களாவைச் சுற்றிக்கொண்டு இருக்கிறார் என்பதும் தெரிந்து விட்டது. அருணாசலமும் என் மாமாவும் கூடப் படித்தவர்கள்

என்பது தெரிந்ததனால்தான் இந்த அருணாசலம் வேறு எதற்காகவோ சுற்றுகிறார் என்று தெரிந்து கொண்டேன்.

பங்களாவுக்கு எப்போதும் ஒரு கோஷ்டிக்குத் தெரியாமல் மற்றொன்றாக இரண்டு கோஷ்டிகள் வருவதை நான் முதலில் தெரிந்து கொண்டேன். ஒன்று சீட்டாடும் கோஷ்டி. மற்றொன்று கத்திச் சண்டை பழகும் இந்த உப்பு கோஷ்டி! சீட்டாடும் கோஷ்டி மூலம்தான் புதுக் கள்ள நோட்டுகளும் நாணயங்களும் வெளியே செலாவணி ஆகத் தொடங்கும். புழக்கத்திலுள்ள நல்ல நோட்டுகளை டிக்கியும் ரெட்டியாரும் எடுத்துக்கொண்டு கள்ள நாணயங்களை அங்கே விட்டு விடுவது வழக்கம். இதனால் அன்றாடச் செலவு நடந்து வந்தது. டிக்கியும் ரெட்டியாரும் சீட்டாடச் சென்றதை நான் கீழே ஒளிந்து கொள்ளப் போனபோது பார்த்தேன்.

அதன் பிறகு பஞ்சும் வர்ணச் சட்டிகளும் நிறைந்த அறையில் அருணாசலம் உட்கார்ந்து எதையோ பார்த்துக்கொண்டிருந்தார். நான் அவர் கண்ணில் பட்டுவிட்டேன். எங்கள் இரண்டு பேருக்குமே ஆச்சரியமாக இருந்தது.

"இப்பொழுதாவது சொல்லுங்கள், என் பெயர் உங்களுக்கு எப்படித் தெரிந்தது என்று. என்னை ஏன் நீங்கள் பார்க்கவேண்டுமென்று டெலிபோனில் கூப்பிட்டீர்கள்?" என்று நாங்கள் வெளியில் பேசிக்கொண்டே வந்தபோது கேட்டேன்.

"டிக்கி உன் பெயரை இந்த ரெட்டியாரிடம் சொல்லிக்கொண்டிருந்தான். நீ கத்திச் சண்டை கற்றுக்கொள்ள வருகிறாய் என்றும், உன் மூலம் பாங்கின் சாவியைக் கொண்டு வரலாம் என்றும் பேசிக்கொண்டார்கள். அதனால் உன்னை எச்சரிக்கவே வரவழைத்தேன்" என்றார் அருணாசலம்.

"இவர்களிடம் புத்தம் புது நோட்டுகளும் நாணயங்களும் இருக்கின்றன. நான் என் கண்ணால் பார்த்தேன். அதெல்லாம் திருடிக்கொண்டு வந்து வைத்திருக்கிறார்களா?" என்று கேட்டேன்.

"இல்லை; நீதான் இந்த விஷயத்தில் எனக்கு உதவி செய்யவேண்டும். நீ ஏதாவது மெஷின்கள்



பெரியவர்:—"வரவங்க போறவங்களைப் பார்த்துக் கல்லை எறிடா, பையா!"

பையன்:—"எனக்கேன் சார், அந்தப் பாவம்? நான் மாங்காயைத்தான் அடிப்பேன்!

உள்ள அறையைப் பார்த்தாயா? பார்த்திருந்தால் என்னை அங்கே அழைத்துப்போ. அங்கே போனால்தான் உண்மை தெரியும்" என்றார்.

"நான் பார்க்கவில்லை. ஆனால் இங்கே பக்கத்தில் ஒரு சுவிச்சு இருக்கிறது. அதைத் திருகினால் எங்கேயோ 'தடால்' என்று சத்தம் கேட்கிறது!" என்றேன் நான்.

இதற்குள் யாரோ வருவது போல இருந்தது. அணில் கத்தியது. உடனே அருணாசலம், "இதோ பார்! நீ எப்படியாவது இவர்கள் கையில் சிக்கிக்கொண்டால் அந்தச் சுவிச்சை மட்டும் எப்படியாவது திருகி வைத்துவிடு. நான் உன்னைப் பிறகு சந்திக்கிறேன்" என்று சொல்லிவிட்டு மறைந்துகொண்டார்.

இவ்வளவுதான் எனக்குத் தெரியும். அதற்கு மறுநாள்தான் என்னைக் கொண்டுவரும்படி ரெட்டியார் டிரைவரை அனுப்பியிருக்கிறார். அருணாசலத்தையும் பள்ளிக்கூடத்துக்குப் பின்னால் பார்த்தோம். இதற்குள் என்னிடம் சாவி இருப்பதை அவர் தெரிந்துகொண்டு விட்டார். நான் அவரிடம் சாவியைக் கொடுத்துவிட்டேன். என்னை இந்த டிரைவர் பங்களாவுக்கு அழைத்துப் போய், கண்களைக் கட்டி, ரெட்டியார் முன் கொண்டு நிறுத்தினான். ரெட்டியார் சாட்டையால் அடிக்க வந்தபோது போலீஸ்காரர்களுடன் அருணாசலமே வந்துவிட்டார். பிறகு நடந்தவைகளை நீங்கள் அறிவீர்கள்.

* * *

ஜக்கு இவ்வாறு சொல்லிக்கொண்டிருந்தபோதே நந்துவுக்கும் உல்புக்கும் பிரமிப்பாக இருந்தது. அவன் சொல்லி முடித்ததும் மூவரும் வீட்டுக்குக் கிளம்பினார்கள். ஆனால் அதற்குள் எதிரே யாரோ வருவது தெரிந்தது. அவர் அருணாசலம்தான். அவர் ஜக்குவின் கையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு, "நாளைக்கு அல்லது மறுநாள் நீ மறுபடியும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரும்படி இருக்கும்" என்றார்.

"ஏன்?" என்று பயந்தவாறே கேட்டான் ஜக்கு.

"பயப்படாதே. உனக்குப் பரிசு கொடுக்கப் போகிறார்கள். அதற்காக உன்னிடம் உன் விலாசம் முதலியவற்றைக் கேட்டுக் குறித்துக் கொள்வார்கள். அதற்குத்தான் நீ வரவேண்டும்" என்றார் அருணாசலம்.

நந்துவும் உல்பும் சந்தோஷத்துடன் ஜக்குவைப் பிடித்துக் கொண்டு குதித்தார்கள்.

"இவன் இந்தச் சாவியைக் கொடுத்தது இருக்கட்டும். அந்தச் சுவிச்சைக் கண்டு பிடித்திருக்காவிட்டால் அவர்களை நாம் பிடித்திருக்கவே முடியாது. சாமான்களையெல்லாம் அவர்கள் மறுநாளே அப்புறப்படுத்தியிருப்பார்கள். ஆகவே நான் துப்பறிந்து இந்தக் கேஸைக் கண்டுபிடித்தேன் என்று சொல்வதைவிட 'ஜக்கு துப்பறிந்தான்' என்று சொல்வதுதான் சரியானது" என்றார் அருணாசலம்.

"மாமாவுக்கு இதெல்லாம் தெரியுமா?" என்று கேட்டான் நந்து.

"ஜக்கு துப்பறிகிறான் என்பது அவன் மாமாவுக்குத் தெரியும். ஆனால் அடி விழாது. ஏனென்றால் அவன் மாமி அவனுக்குப் பரிந்து கொண்டு வந்துவிடுவாளே" என்றார் அருணாசலம்.

ஜக்கு துப்பறியும் நிபுணனைப் போல அவர் முகத்தைக் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தான். உல்பின் தோள்மீதும் நந்துவின் தோள் மீதும் கையைப் போட்டுக்கொண்டு பெரிய வீரனைப் போல நடந்து சென்றான்.

அருணாசலம் அவர்கள் செல்வதை ஆனந்தத்துடன் பார்த்துக் கொண்டே நின்றார்.

"ஜக்கு! ரொம்பப் பொருத்தமான பெயர்! ஜக்கு - துப்பறிகிறான்! ரொம்பப் பொருத்தமான காரியம்!" என்று அவர் வாய் முணுமுணுத்தது.

முற்றும்

மாணவன்

(நாட்டிய - இசை நாடகம்)

ரா. லக்ஷ்மி (L. 35)

கண்ணன்:—

பாடு பட்டாலே - நேசமா பாடுபட்டாலே
பலன் கூடும் முன்னாலே
பறந்தோடும் பரீக்ஷைத் தொல்லை தன்னாலே
ஓ..........புத்தகமே..... .....உண்மையாய்ப் (பாடு)
பரீக்ஷைக்கே நாம் படித்துநல்ல
மார்க்கு வாங்குவோம் - ஹெட்மாஸ்டரைப் பாஸுக்காக
காக்காய் பிடிக்கும் நாளை விரட்டி ஓட்டுவோம் (பாடு)

விஜயன்:—

மாலை நேரமாகி வெகுநேரமாச்சே - நேரமாச்சே
கண்ணன் விளையாட வரும் நேரமாகிப் போச்சே
எங்கக் கண்ணன் விளையாட வரும் நேரமாகிப் போச்சே
அவன் ஆவலோடே காத்திருக்க லாச்சே
எங்கக் கண்ணன் ஆவலோடு காத்திருக்க லாச்சே
சந்தோஷத்துடன் போய் நன்றாக விளையாடுவேன்
நான் அசடு போலிருந்தவனை ஏமாத்துவேன்.

* * * *

தாய்:— நாலுவருஷமாச்சு நீ பாஸ்பண்ணி நான் எப்போது பாக்கறது— கண்ணாலே – எப்போது பாக்கறது?

கண் :—என்தலை எழுத்து
இப்படி இருந்தா
என்னம்மா செய்யறது -
அதுக்கு நான்
என்னம்மா செய்யறது?

தாய் :—கவனமாய்ப் புத்தகம்
படிக்கிறது - விளை
யாடாமே
புத்தகம் படிக்கிறது.

கண் :—விளையாடாமேயா?

தாய் :—ஆமாம்பா.

கண் :—சரியம்மா.
அப்பொழுது மட்டும்
பாஸ் ஆகுமின்னு
யாருக்கு தெரியும்? - அதுவும் தவிர,
விஜயன் கூப்பிடும்போது விளையாடாம விருப்பது
மிகவும் கஷ்டமம்மா - எனக்குப் பிடிக்கவில்லையம்மா.

* * * *

விஜயன் :—திரும்பி ஓடு, வராதே - திரும்பி ஓடு.

கண்ணன் :—ஏன்?

விஜ :—திரும்பி ஓடு, வராதே - திரும்பி ஓடு.
என்னை ஏசிப் பேசும் வம்புப்பேச்சு போதும் - உன்
எண்ணம் தெரியலாச்சே - என்மேல் இருந்த சிநேகம் போச்சே.

கண் :—நேசமில்லாட்டா விளையாட உன்னைத் தேடிவருவேனோடா -
உன்னை இங்கே தேடிவருவேனோடா?

விஜ :—நேசங்காட்டி மோசஞ்செஞ்ச
ஆம்பளெப்புள்ளே, அதனாலே ஒம்மேலே
எனக்கு அக்கறையில்லே - இனிமே
அக்கறையில்லே.

கண் :—என்ன சொன்னே? அக்கறை யில்லையா?
படிக்காமெப்போனா - எனக்குப் பாஸ்
கொடுக்கிறவன் யாரு - எனக்குக்
கொடுக்கிறவன் யாரு?

விஜ :—மறுத்துப் பேசாதே - உனக்குப்
பாஸாகிப் போச்சே.

கண் :—யாரு சொன்னு? அப்படி
யாரு சொன்னு?

விஜ :—நம்ப ஸ்கூலிலே யிருக்கும்
என் அத்தான்
ஹெட்மாஸ்டர் சொன்னுர்.

கண் :—பாட்டன் பூட்டன் செஞ்ச
பூஜா பலன்தானே
எனக்கு மெட்ரிக்கில்
கிடைக்கும் பாஸ்
தானே.
வீட்டுக்குப் போகலாம்,
அம்மா, தேடுவாளே-
அம்மா தேடுவாளே-நான்
பாஸான செய்தியைக்
கேட்டு ஆடுவாளே -
கூத்தாடுவாளே.

விஜ :—ஆட்டமும் கொண்டாட்டமும் உன் வீட்டிலேபோய் ஆடு!
கிரிக்கெட் டாட்டா மாடப்போகணும் நேரமாகுது பாரு!

கண் :—உன் இஷ்டப்படியே - இதோ
விளையாட வந்தாச்சே!

யார், எவ்வளவு - விடைகள்:

விடை: (1) தபாலில் கடிதம் போடப் போனுன்.

(2) உன் நண்பன் சொல்லும் பதிலில் ஒன்று ஸ்தானத்திலுள்ள எண்ணை அழித்துவிடு. மீதி இருப்பது விடை.

(3) $1-2-3-4+5-6+7+8-9+10+11+12=30$.

'பொழுதுபோக்கு' விடைகள்:

இ. வ.	மே. கீ.
1. தண்டவாளம்	1. தச்சன்
4. ஒணுன்	2. வாணுலி
5. அடி	3. படி
6. லிங்கம்	5. அம்பு
8. ஈ	7. கண்
9. பட்டம்	8. ஈட்டி
11. ஒட்டியாணம்	9. பட்சி
12. பல்	10. ஊதல்
13. எலி	11. ஒன்று
14. பூனை	12. பனை

குட்டிக் கதைகள்

ராமசர்மா

மூன்று பொருள்கள்

தன் நாட்டை விட்டு வேறு நாட்டுக்குச் சென்ற ஒருவன், கையில் காசில்லாமல் பசியால் வாடி, கடை வீதியை அடைந்தான். அங்கே ஒரு வாழைப்பழக் கடையைப் பார்த்ததும் கடைக்காரனிடம் போய், "பசிக்கிறது" என்று கேட்டான். அவன் அடித்துத் துரத்தினான். ஆனால் வழிப்போக்கன் பசி தாங்காமல் ஒரு சீப்பு வாழைப்பழத்தை எடுத்துத் தின்று விட்டான். உடனே கடைக்காரனுக்கும் அவனுக்கும் சண்டை நடந்தது. அந்தச் சண்டையில் வழிப்போக்கன் ஒரு தடியை எடுத்துக் கடைக்காரன் மேல் வீசினான். அது கடைக்காரன் மண்டையில் பட்டு அவன் உடனே இறந்துவிட்டான்.

உடனே வழிப்போக்கனைக் கைது செய்து பாதுஷாவுக்கு முன்னால் கொண்டுபோய் நிறுத்தினார்கள். விசாரணையின்போது வழிப்போக்கன் குற்றத்தை ஒப்புக்கொண்டான். தான் பசியினால் பழத்தைத் திருடியதாகவும், கோபத்தில் கடைக்காரன்மேல் தடியை வீசியதாகவும், அவனைக் கொல்ல வேண்டும் என்று எறியவில்லை என்றும் சொன்னான்.

அப்போது பாதுஷா, "எப்படி இருந்தாலும் குற்றம் குற்றம்தான். ஆகையினால் உன்னை நாளைக் காலையில் தூக்குப் போட உத்தரவு செய்கிறேன்" என்றார்.

அதைக் கேட்ட வழிப்போக்கன், "நான் சாவதைப் பற்றி வருந்தவில்லை. தயவு செய்து முப்பது நாள் தவணை கொடுத்தால் நான் என் நாட்டுக்குப் போய், பெண்டாட்டி பிள்ளைகளிடம் சொல்லிக் கொண்டு வந்துவிடுகிறேன்" என்றான்.

பாதுஷா, "நீ வரும் வரையில் யாராவது உனக்குப் பதிலாக உத்தரவாதமாய் இருந்தால் போகலாம்" என்றார்.

"இந்த ஊரில் எனக்குத் தெரிந்தவர்கள் யாரும் இல்லையே" என்றான் வழிப்போக்கன். அப்போது பாதுஷாவின் பக்கத்தில் இருந்த கிழட்டு மந்திரி, "நான் உத்தரவாதம் இருக்கிறேன்" என்றார்.

அதன் பிறகு வழிப்போக்கன் தன் நாட்டுக்குப் போய் வருவதாகப் போனான். அவன் போய் ஒவ்வொரு நாளாக இருபது நாள் ஆகிவிட்டன. மந்திரியைப் பார்த்துப் பாதுஷா, "இன்னும் அவன் வரவில்லையே?" என்றார். மந்திரி, "நிச்சயமாய் வந்துவிடுவான்" என்றார். இப்படியே இருபத்து ஒன்பது நாட்களும் ஆகிவிட்டன. போனவன் வரவில்லை. அப்போதும் மந்திரி, "நாளைக்கு வந்துவிடுவான்" என்றார்.

முப்பதாவது நாள் காலை. வழிப்போக்கன் வரவில்லை. பாதுஷா மந்திரியை அழைத்தார். "இன்னும் வரவில்லையே?" என்றார். மந்திரி, "அவன் வராவிட்டால் அவனுக்குப் பதிலாக என்னைத் தூக்கில் போட்டுவிடுங்கள்" என்றார். பாதுஷாவோ வருத்தத்துடன், "மந்திரி, நீர் இப்போது வேண்டுமானாலும் தப்பித்துக்கொண்டுவிடும். உம்மை உம் உத்தரவாதத்திலிருந்து விலக்கிவிடுகிறேன்" என்றார். ஆனால் மந்திரி பிடிவாதமாய், "நான் எப்போது வாக்குக் கொடுத்துவிட்டேனோ அதை எப்படியாவது காப்பாற்றிவிடுவேன். அவன் வரவில்லையானால் என்னைத் தூக்குப் போட்டுவிடுங்கள்" என்றார். அன்று சாயங்காலமும் ஆயிற்று. அவன் வரவில்லை. பாதுஷா உத்தரவுப் படி தூக்கு மேடைக்கு மந்திரி அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே ஊர் முழுவதும் கூடியிருந்தது. பாதுஷாவும் வந்தார். இன்னும் சில நிமிஷங்களில் மந்திரியைத் தூக்குப் போட்டு விடுவார்கள். அப்போது, "நில்லுங்கள்!" என்று ஒரு சத்தம் கேட்டது. அதே வழிப்போக்கன்தான்!

அவன் வந்ததும் மந்திரிக்குப் பதிலாகத் தூக்கு மேடையில் ஏறினான். பாதுஷாவுக்கு ஆச்சரியமாயிருந்தது. உடனே சந்தோஷத்துடன் அவனை மன்னித்து விடும்படி உத்தரவிட்டார். அதன் பிறகு மந்திரியைப் பார்த்து, "மந்திரி, முன் பின் தெரியாத ஒருவனுக்காக நீர் ஏன் உத்தரவாதம் ஏற்றுக் கொண்டீர்?" என்று கேட்டார். மந்திரி, "பாதுஷா! உலகத்தில் நியாயம் என்று ஒன்று இருக்கிறது; அதற்காகத்தான்" என்றார்.

அதன் பிறகு அவர் அந்த வழிப்போக்கனைப் பார்த்து, "ஏன் அப்பா, நீதான் தப்பிப் போய்விட்டாயே! திரும்பவும் ஏன் வந்தாய்?" என்று கேட்டார். அவன், "பாதுஷா! உலகத்தில் சத்தியம் என்று ஒன்று இருப்பதால்தான் அதைக் காக்கத் திரும்பி வந்தேன்" என்றான். அந்த வழிப்போக்கன் மறுபடியும்

பாதுஷாவை நோக்கி, "பாதுஷா! என்னை ஏன் நீங்கள் தூக்கில் போடாமல் மன்னித்துவிட்டீர்கள்?" என்று கேட்டான். பாதுஷா சொன்னார்: "அப்பனே! உலகத்தில் கருணை என்று ஒன்று இருக்கிறது. அதைக் காப்பாற்றத்தான்." —அரபிக் கதை.

மாலுமி

ஒரு நாள் கடற்கரையில் ஒரு மாலுமி உட்கார்ந்திருந்தான். அப்போது இரண்டு சிறு பிள்ளைகள் அங்கு வந்தார்கள்.

இரண்டு பேரும் மாலுமியைப் பார்த்து, "அப்பா மாலுமி, எங்களுக்குப் படகு ஓட்ட வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. நீ கற்றுக் கொடுக்கிறாயா?" என்று கேட்டார்கள். மாலுமி, "முதலில் இந்தக் கயிற்றில் முடி போடுவதற்குக் கற்றுக்கொள்ளுங்கள். பிறகு படகு ஓட்டலாம்" என்று சொல்லி ஆளுக்கு ஒரு கயிற்றை எடுத்துக் கொடுத்தான். முடி போடும் விதத்தையும் சொல்லிவிட்டு மாலுமி எங்கேயோ வெளியில் போனான்.

அவன் போனதும் சின்னப் பையன் கயிற்றை எடுத்து வைத்துக்கொண்டு முடி போட்டுக்கொண் டிருந்தான். பெரிய பையன் ஜன்னல் பக்கத்தில் போய் நின்று எட்டிப் பார்த்துக் கொண்டே, "அடே! சமுத்திர அலைகளைப் பார். எவ்வளவு அழகாயிருக்கிறது!" என்றான். சின்னப் பையன், "நான் வர முடியாது. இந்த முடியைப் போடப் பழகவேண்டும்" என்றான். மறுபடியும் மூத்தவன், "அதோ பாரடா! ஒரு படகு! எவ்வளவு அழகாக அசைந்து அசைந்து வருகிறது! வந்து பார்!" என்றான். சின்னவன், "நான் வர முடியாது. இந்த முடியைப் போடப் பழகவேண்டும்!" என்றான்.

சற்று நேரத்தில் மாலுமி திரும்பி வந்தான். வந்ததும் சின்னப் பையன், "இதோ முடிபோட்டுப் பழகிவிட்டேன்" என்றான். பெரியவன், "நான் அந்தப் படகையும் சமுத்திரத்தையும் பார்த்துக்கொண் டிருந்தேன். என்னைப் படகில் ஏற்றிக் கொண்டு போ" என்றான்.

மாலுமி, "சின்னப் பையனைத்தான் முதலில் ஏற்றிக் கொண்டு போவேன்" என்றான். அதைக் கேட்ட பெரிய

பையன், "நான்தான் பெரிய பையன். என்னைத்தான் முதலில் ஏற்றிக்கொண்டு போகவேண்டும். முடி போடுவது எல்லாம் எனக்குத் தெரியும்" என்றான். மாலுமி கேட்கவில்லை. "சொன்ன வேலையை அப்படியே செய்கிறவன்தான் நன்றாகப் படகு ஓட்ட முடியும்" என்று சொல்லி, சின்னவனை மட்டும் அழைத்துக்கொண்டு போனான்.

—இங்கிலாந்துக் கதை.

தோசை

பேபி என்ற ஐந்து வயதுக் குழந்தை ஒரு தோசைக்காகத் தன் அண்ணனுடன் சண்டை பிடித்துக்கொண்டிருந்தது.

"என்னுடையது!" என்றது பேபி.

"இல்லை; என்னுடையது!" என்றான் அண்ணா.

"நான் விடமாட்டேன்" என்று சொல்லி அவனை அடித்தது பேபி.

அப்போது அவர்களுடைய மாமா அங்கே வந்தார். பேபியைப் பார்த்து, "யாருடன் சண்டை போடுகிறாய்?" என்று கேட்டார்.

"ஏன், என் அண்ணாவுடன்தான்" என்றது பேபி.

"இல்லை, நிஜமாகச் சொல்லு" என்றார் மாமா.

"என் அண்ணனுடன்தான் சண்டை போடுகிறேன். நீங்களே பாருங்கள்" என்றது பேபி.

"நீ சொல்வது பொய்! உன் அண்ணனாயிருந்தால் அவனை நீ அடிக்கமாட்டாய்!" என்றார் மாமா.

"அவன்தான் என் தோசையை எடுத்துக்கொண்டு விட்டானே!" என்றது குழந்தை.

"ஓஹோ, அப்படியா! இப்போதுதான் புரிகிறது. அந்தத் தோசைதான் உன்னுடைய அண்ணன். அதனால்தான் அதற்காகச் சண்டை போடுகிறாய்" என்றார் மாமா.

குழந்தை தன் தவற்றை உணர்ந்துகொண்டது.

—ஆங்கிலக் கதை.

பாலைநகர்ச் சோலை

ரா. மீனுட்சி (M. 406)



ஜயபூர்,
22-5-51

அன்புள்ள நீலாவுக்கு,

உனது அன்பு ததும்பும் கடிதம் கிடைத்தது. நான் இங்கே சுகமாக இருக்கிறேன். உன் சுகத்தைப் பற்றி மேலும் அறிய விரும்புகிறேன். ஜயபூரைப்பற்றி நான் ஒன்றும் எழுதவில்லை என்று வருத்தமாய் எழுதியிருந்தாய்.

சரித்திரத்தில் பெயர் பெற்ற ராஜபுதனப் பாலைவனத்தையும் அங்கு ராஜரிகம் நடத்திய வீர ராஜபுத்திரர்களையும் பற்றி நாம் படித்திருக்கிறோம். கற்றதைக் கண்ணால் பார்க்கும் பொழுது ஒருவகை மகிழ்ச்சியும் வியப்பும் உண்டாகின்றன.

பாலைமணலில் பார்ப்பதற்கு விநோதமான அழகிய நகர் ஜயபூரை எப்படி நிர்மாணித்தார்கள்? என்ன மன உறுதி பெற்றவர்களாக இருக்கவேண்டும்!

உயர்ந்த செந்நிறப் பூச்சுப் பூசிய கட்டிடங்கள், அகலமான நேரான வீதிகள், இணை இணையாக அவை அமைக்கப்

பட்டிருக்கும் காட்சி, ராம் நிவாஸ் பூங்காவின் எழில், நகரைச் சுற்றிலும் விளங்கும் கோட்டைகளின் உன்னதம், ஊரைச் சுற்றி வளையவிருக்கும் மதிலின் கம்பீரம் - இப்படி இன்னும் எத்தனையோ வனப்புகள்! நீ நேரிலிருந்து அனுபவிக்க முடியவில்லையே என்று இருக்கிறது.

பல வருடங்களாகத் தனி மன்னர் ஆட்சியின் கீழ் இருந்த இங்குள்ள மக்களின் பண்பாடே ஒருவிதமாக இருக்கிறது. அவர்கள் பேசும் மொழி நாம் படித்த ஹிந்தி போல் இல்லை. பெரும்பாலும் திரிந்திருக்கிறது. இதை மார்வாரி என்று சொல்லுகிறார்கள். வாளேந்திய ராஜபுத்திர வீரர்களை அடிக்கடி இங்கே காணலாம். இன்னிசை வாத்தியங்களை ராஜவிருதுகளில் நடப்பது போல் கல்யாண வைபவங்களில் இசைக்கிறார்கள். மணமகன் ராஜபுத்திர உடையில் கையில் வாளேந்திக் குதிரை மீது பவனி வரும் காட்சி வியப்பாக இருக்கிறது. நீ பார்த்தால் கட்டாயம் 'களுக்' கென்று சிரித்துவிடுவாய். வீதிகளில் இருபுறங்களிலும் காசுக்கடைகள், பண்டகக்கடைகள், தானிய மண்டிகள் ஒழுங்காக அமைந்திருப்பதைப் பார்ப்பதற்கே பெருமிதமாக இருக்கிறது.

நகரின் தென்புறம் இருக்கும் ராம்நிவாஸ் பூங்காவின் அழகை என்னால் எழுத முடியவில்லை. வசந்தத்தில் அங்கே தோன்றும் பல வண்ண மலர்க் காட்சி கண்ணுக்கு விருந்து. கோடையில் இங்குள்ள கொடி வீடுகளில் நாள் பூராவும் இருக்கலாமா என்று தோன்றுகிறது.

ஊரின் கிழக்கே சூரிய வாயிலும், மேற்கே சந்திர வாயிலும் அமைத்திருக்கிறார்கள். சந்திர வாயிலிலிருந்து நேரே சென்றால் திரிபோலியா அரண்மனையைக் காணலாம். பின்னர், காற்று மண்டபம் (ஹவா மஹல்) இன்னும் நேரே சென்றால் சூரிய வாயிலை அடையலாம். அங்கிருந்து

உபாத்தியாயர்: டேய் சங்கரா! நீ சினிமாவுக்கு அடிக்கடி போகிறாயாமே! கண் கெட்டுவிடும் அப்புறம் என் மாதிரி கண்ணாடி போட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

பையன்: நான் சங்கரன் இல்லே சார்! சாமிநாதன் சார்!



கொஞ்ச தூரம் சென்றால் 'கல்தா' என்ற புனித நீர்க குண்டு இருக்கிறது. இது ஒரு மலையின் பின்புறத்தில் இருக்கிறது. சிறிய வெடிப்பிலிருந்து நீர் கசிந்து இந்தக் குண்டை நிரப்புகிறது. எப்பொழுதும் வற்றுவதில்லை என்கிறார்கள். காலக மகரிஷி இங்கே தவம் புரிந்தார் என்கிறார்கள்.

திரிபோலியா அரண்மனைக்குள் தங்கத்தாலும் வெள்ளியினாலும் எழுதிய உயிர்ச் சித்திரங்கள், பழங்காலச் சுவடிகள் அடங்கிய முத்து மஹால் இருக்கிறது. புராதன வீரர்களின் பலவகைப் போர்க் கருவிகள் நிறைந்த ஆயுத சாலை இருக்கிறது. தர்பார் மண்டபம் இருக்கிறது.

ஊருக்கு வடக்கே அமீர்க் கோட்டை ஒன்று இருக்கிறது. இதனுள் வெண் சலவைக்கல்லால் அமைக்கப்பட்ட காளி தேவியின் கோவில் இருக்கிறது. தேவி மிகவும் மகிமை பொருந்தியவள் என்று நூற்றுக்கணக்கான ஜனங்கள் வந்து தரிசித்துப் போகிறார்கள்.

கோட்டையினுள் கண்ணாடி மண்டபம் ஒன்று இருக்கிறது. இதனிடையே நீ நின்றால் உன் ஆயிரம் பிரதிபிம்பங்களைக் காணலாம்! பிரமை தட்டக்கூடியதாக இருக்கிறது.

இந்த ஊரிலுள்ள மியூஸியத்தின் தோற்றம், அமைப்பு, அங்கே சேகரிக்கப்பட்டுள்ள பொருள்கள் யாவும் நம்மவரின் புராதனக் கலைத் திறத்தை விளக்குவதாக இருக்கின்றன.

'பாலையில் பசிய பூஞ்சோலை, பாரதத்தின் பாரீஸ்' என்றெல்லாங்கூட ஜயபூரைச் சொல்லலாம்.

உன் அன்புள்ள,
ரா. மீனாட்சி.

கேட்டீர்களா!

கண்ணன் கழகக் கூட்டம்

கண்ணன் கழகத்தின் கூட்டம் ஒன்று மயிலாப்பூர் சம்ஸ்கிருத காலேஜ் மைதானத்தில் ஜூலை 29-ஆம் தேதி நடைபெற்றது. மைதானம் கண்ணன் போட்டோப்படங்களாலும் விசேஷமாக அலங்கரிக்கப் பட்டிருந்தது. அங்கத்தினர்களான ஆயிரம் மாணவர்களும் 350 மாணவிகளும் பல பெற்றோர்களும் கூட்டத்துக்கு அழைப்பின் பேரில் வந்திருந்தார்கள். சிறுவரும் சிறுமியரும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டார்கள். 40 பேர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் குளிர்ப்பானமும் பாரி மிட்டாய்ப் பொட்டலமும் விநியோகம் செய்யப்பட்டன. கலைமகள் ஆசிரியர் ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் தலைமை வகித்தார். சிறுவர்களுக்கு இதுபோன்ற கூட்டம் நடத்துவது சிறந்த காரியம் என்றும் அறிவும் ஆற்றலும் பெருகும் என்றும் அவர் கூறினார். கழகத்தின் நோக்கம் பற்றியும் நடவடிக்கைகள் பற்றியும் கண்ணன் ஆசிரியர் பேசினார். இந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சிகள் பலவும் படமாகப் பிடிக்கப்பட்டன. அவை அடுத்த கண்ணன் இதழில் வெளியாகும்

அரிசி ரேஷன்

ஆகஸ்டு மாதம் 12-ஆம் தேதி முதல் அரிசி ரேஷன் 8 அவுன்ஸிலிருந்து ஆறு அவுன்ஸாகக் குறைக்கப்படும் என்று சென்னை சர்க்கார் அறிவித்திருக்கிறார்கள்.

கல்வி மந்திரி ஆஸாத்

பாரிஸில் நடந்த ஐ. நா. சபையின் கல்வி - சமூக - பொருளாதார கவுன்சில் கூட்டத்துக்குச் சென்றிருந்த இந்திய யூனியன் கல்வி மந்திரி மௌலானா அபுல் கலாம் ஆஸாத் ஐரோப்பாவிலும் மத்தியக் கிழக்கு ஆசிய நாடுகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு டில்லி திரும்பினார்.

அமெரிக்க மாணவர் கோஷ்டி

பென்ஸில்வேனியா ஐக்கிய அமெரிக்காவில் ஒரு ராஜ்யம். அங்கிருந்து 22 மாணவர்கள், ஆசிரியர்கள் அடங்கிய கோஷ்டி ஒன்று இந்தியாவுக்கு வந்திருக்கிறது. இவர்கள் இந்தியாவிலுள்ள நிலையை நேரில் அறியவும் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே உள்ள நல்லுறவை வளர்க்கவுமே வந்திருக்கிறார்களாம்.

புதிய ரெயில் பாதை

சேலத்திலிருந்து தர்மபுரி வழியாக ஹோசூருக்கு ஒரு புதிய மீட்டர் கேஜ் ரெயில் பாதை போடச் சென்னை சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பாதையையே பின்னர் பெங்களூர் வரையில் விஸ்தரிப்பது சுலபமாம்.

பொழுதுபோக்கு

டி. வி. ரங்கசாமி



(விடைகள் 44-ஆம் பக்கம் பார்க்க.)



கண்ணன் ஆசிரியர் அவர்களுக்கு,

நமஸ்காரம். நான் பரிசு பெற்ற காரம்போர்டில் விளையாடும் போது எடுத்த போட்டோவை இத்துடன் அனுப்பியிருக்கிறேன். நன்ருக இருக்கிறதா? கண்ணன் கழகப் பாட்ஜ் கூடப் போட்டுக் கொண்டிருக்கிறேன். நான் இந்தப் போட்டியில் பரிசு பெற்றதைக் குறித்துப் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

— T. S. ரகுநாதன், (R. 157), மேட்டூர் டாம்.

காரம்போர்டு பரிசு பெற்ற T. S. ரகுநாதன்.

* * *

கண்ணன் அண்ணு, வணக்கம்.

நான் ஒன்று கேட்கிறேன். வருத்தப்படாமல், கோபிக்காமல் பதில் சொல்லுங்கள். இல்லை, எழுதுங்கள்! சின்னஞ் சிறு கேள்வி தான்:

கண்ணன் கழகம் உங்களுக்காக ஆரம்பித்திருக்கும் சங்கம். இந்தச் சங்கம் புது மாதிரியானது. இதற்குப் பல அருமையான திட்டங்கள் இருக்கின்றன. இதில் சேருபவர்களுக்குப் பல சௌகரியங்கள் உண்டு. நண்பர்கள் ஏராளமாக ஏற்படுவார்கள். விளையாட்டு, எலெக்ஷன், உல்லாச யாத்திரை, பரிசுகள், அறிவு வளர்ச்சி சாதனங்கள் முதலிய எத்தனையோ நன்மைகளும் வசதிகளும் கிடைக்கும். இப்போது 8000 பேருக்குமேல் இதில் நிரந்தர அங்கத்தினராக இருக்கிறார்கள். இமயம் முதல் குமரிவரையிலும் இன்னும் இலங்கை, மலேயா, முதலிய வெளிநாடுகளிலிருந்துங்கூட பல அங்கத்தினர்கள் இதில் சேர்ந்திருக்கிறார்கள்.

உங்களுக்கு இதில் சேர வேண்டுமென்று ஆசையாக இருக்கும். இதுவரையில் நீங்கள் சேராமல் இருந்தால் இப்பொழுது கூடச் சேரலாம். சேருவது மிகவும் சுலபம். இந்த இதழிலேயே ஒரு கூபன் இருக்கிறது. அதைப் பூர்த்தி செய்து கத்தரித்து அனுப்பவேண்டும். அவ்வளவுதான்.

இதே போன்ற கூபன்கள் ஒவ்வொரு மாதமும் கண்ணனில் வெளிவரும். தொடர்ந்து மூன்று மாதக் கூபன்களை அனுப்புகிறவர்கள் கண்ணன் கழக நிரந்தர அங்கத்தினர்கள். அவர்கள் பெயரைக் க்ண்ணனில் வெளியிடுவோம். மூன்று மாதக் கூபன்களைப் பூர்த்திசெய்து மொத்தமாக அனுப்பினால் போதும். அவர்களுக்கு இனாமாக எனாமல் பாட்ஜ் ஒன்று கழகத்திலிருந்து கிடைக்கும். இதற்குச் சந்தாத் தொகை எதுவும் கிடையாது; கூபன்கள்தான் அனுப்பவேண்டும். ஒரே குடும்பத்தில் உள்ள குழந்தைகள் ஒரு கூபனைப் பூர்த்தி செய்து மற்றவர்கள் பெயர்களையும் அதில் சேர்த்து எழுதி அனுப்பலாம். ஆனால் தலைக்கு மூன்று கூபன் வீதம் தான் அனுப்பவேண்டும். அவ்வப்போது கண்ணனில் போட்டிகள் வெளியாகின்றன. இந்தப் போட்டிகளில் கண்ணன் கழக அங்கத்தினர்கள் மட்டுமே கலந்துகொள்ளலாம். மற்றவர் கலந்துகொள்வதற்கில்லை.

REG. No. M. 5542.

கண்ணன் வெளியீடுகள்

குழந்தைகளுக்காக என்று திட்டமிட்டு நல்ல ஸ்வாரஸ்யமான கதைகளாகப் பொறுக்கிச் சில புத்தகங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தப் புத்தகங்களில் நிறையப் படங்கள் இருக்கின்றன. [illegible] மனத்தைக் கவரும் கதைகள்.

இப்போது தயாராக இருக்கும் புஸ்தகங்கள்:

1. **ராஜாவும் குருவியும்** "சோமசன்மா" — அணா 8

   ராஜாவும் குருவியும், ஆமையும் முயலும், காளையும் நாயும், நாயும் நிழலும், பிராம் மணனும் பொன் காப்பும், நரியும் திராட்சையும், சுண்டெலியும் சிங்கமும் என்ற ஏழு கதைகளின் தொகுதி.

   இதே பெயரில் நீங்கள் படித்திருக்கும் பழைய கதைகளல்ல இவைகள். படித்துப் பாருங்கள்.

2. **கழுகும் கிளியும்** "சோமசன்மா" — அணா 8

   கழுகும் கிளியும், ஏமாறுத காக்காய், நண்டும் கொக்கும், புலித்தோல் போர்த்த கழுதை, குரங்கும் ஆப்பும், காக்கையின் தாகம், கழுதையும் நாயும் என்ற ஏழு புதுக் கதைகளின் தொகுதி.

3. **தவளையும் காளையும்** "சோமசன்மா" — அணா 8

   தவளையும் காளையும், நாவல்மரத்துக் குரங்கு, கூடா நட்பு, ஓநாயும் ஆட்டுக் குட்டியும், குரங்கு நியாயம் என்ற ஐந்து கதைகள்.

4. **கோழி விதைத்த நெல்** — அணா 3

   பாட்டுக் கதை.

5. **தங்கத்தின் பந்து** "சூடாமணி" — அணா 3

   தங்கத்தின் பந்து, சண்டை போட்ட நாய்க்குட்டிகள், காட்டுப்பூனையும் குழந்தையும் என்ற மூன்று கதைகள்.

6. **என் பேர் என்ன?** "சூடாமணி" — அணா 3

   பாட்டுக் கதை. 'கொழு கொழு கன்றே கன்றின் தாயே.....'